தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்

Volume No.: 11
Issue No. : 04
Price: Rs: 5/-
Month: August 2009

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

நம் நாடு பெற்றுள்ள சுதந்திரத்தின் பயன்கள் ஏழை எளிய மக்களுக்கு தங்கு தடையின்றி கிடைத்திட வேண்டும் » 7

மனம் கவரும் வணிகம் » 32

மரியம் சாதிக், இ.ஆ.ப., அவர்களுடன் நேர்காணல் » 28

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

கலைஞர் காப்பீட்டுத் திட்டம்

இந்திய
வரலாற்றிலேயே
இதுவரையில்
எந்த
மாநிலத்திலும்
செய்யப்படாத
அரிய திட்டம்,
அற்புத திட்டம்
ஒரு கோடி
ஏழை
குடும்பங்களுக்கு
உயிர் காக்கும்
உயர்
சிகிச்சைக்கான
'கலைஞர்
காப்பீட்டுத் திட்டம்'

Annual Subscription: 60/-

நிர்மல் கிராம புரஸ்கார்

மத்திய அரசு

ஊராட்சிக்கு நல்விருது

- பொதுமக்களிடையே சுகாதார பழக்க வழக்கங்களின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அதன் மூலம் தனிநபர் இல்ல கழிவறை கட்டுவதை ஊக்கப்படுத்தவும், 01-04-1999 முதல் முழு சுகாதா இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தனிநபர் இல்லக் கழிப்பறைகள், பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி கழிப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன.

- மேற்படி திட்டத்திற்கு வலு சேர்க்கும் வகையில் முழு சுகாதாரம், தூய்மையான சுற்றுச்சூழல் மற்றும் திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத கிராம ஊராட்சிகள், வட்டார ஊராட்சிகள் மற்றும் மாவட்டங்களுக்கு ஊக்கம் தரும் வகையில் 'நிர்மல் கிராம புரஸ்கார்' என்ற விருது குடியரசுத் தலைவர் மூலம் 2003ஆம் ஆண்டு முதல் தேசிய அளவில் வழங்கப்பட்டு வருகிறது. ஊராட்சிகளில் மக்கள் தொகையை பொறுத்து ரூ. 50,000/- முதல் ரூ. 5 இலட்சம் வரை ஊராட்சிகளுக்கு ரொக்கப் பரிசு அளித்து வருகிறது.

- தமிழ்நாட்டில் 2004 - 05 ஆம் ஆண்டில் 12 கிராம ஊராட்சிகளும் மற்றும் 1 வட்டார ஊராட்சியும், 2005-06ஆம் ஆண்டில் 119 கிராம ஊராட்சிகளும், 2006-07ஆம் ஆண்டில் 296 கிராம ஊராட்சிகளும், 2007-08ஆம் ஆண்டில் 1,474 கிராம ஊராட்சிகளும் மேற்படி மதிப்புமிக்க விருதினைப் பெற்றுள்ளன

2007-08 ஆம் ஆண்டில், அதிக எண்ணிக்கையில் நிர்மல் கிராம புரஸ்கார் விருதுகளைப் பெற்று தமிழ்நாடு இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு அரசு.

உள்ளே...

ஒற்றைத் தலைவலி 6

ஒற்றைத் தலைவலி பரம்பரையாக வரக் கூடியது என்று சொல்லப்படுகிறது என்றாலும், திட்டவட்ட மாகக் கூற முடியவில்லை. கணவன், மனைவி இருவருக்கும் ஒற்றைத் தலைவலி இருந்தால் பிள்ளைகளுக்கு வர வாய்ப்புண்டு.

வேலை போச்சு... 8

(பேரறிஞர் அண்ணா அவர்களின் சிறுகதை)

மாலையிலே அருமையான சங்கீதக் கச்சேரி நடை பெற்றது. ஆனால் ஒரு விசயம் இங்குக் குறிப்பிட வேண்டி இருக்கிறது.

கேள்வி - பதில் 27

வலது குதிகாலில் அதிகமாக வலி ஏற்பட்டதால் மருத்துவரை அணுகினேன். அவர் எக்ஸ்ரே எடுத்து பார்த்துவிட்டு குதிகாலில் எலும்பு வளர்ச்சி உள்ளதாக சொன்னார். இதை கட்டுப்படுத்த முடியுமா?

கூட்டமைப்புகள் 20

செயற்குழுக் கூட்டம், குடியிருப்பு அமைப்புக் கூட்டம், துணைக்குழுக்கள் கூட்டம், சுய உதவிக் குழுக் கூட்டம், சமூகத் தணிக்கைக்குழுக் கூட்டம் ஆகிய அனைத்துக் கூட்டங்களும் முறையாக நடத்தப்பட வேண்டும்.

பழங்காலப் பெண்டிர் நிலை 16



19

துணை முதல்வர் திரு. மு. க.ஸ்டாலின் அவர்களுக்கு அண்ணா பல்கலைக் கழகம் சார்பில் டாக்டர் பட்டம்

சலியாத உழைப்பும், விடாமுயற்சி, அர்ப்பணிப்பு உணர்வு, ஏழை எளியோரிடம் காட்டும் பரிவு, எளிமை யான அணுகுமுறையால் அனைத்துத் தரப்பினரையும் ஈர்த்து, அரசியல் களத்தில் படிப்படியாக உயர்ந்து...

31

இந்த இதழ் முதல்

முற்றத்தில் இனிதே ஆரம்பம்

சிறுவர் பகுதி

உங்கள் வீட்டுப் பிள்ளைகளின் படைப்புகளை வெளிப்படுத்த அற்புதத் துவக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

மலர் 11 இதழ் 04 ஆகஸ்ட் 2009

கௌரவ ஆசிரியர்
திரு. த. உதயச்சந்திரன், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

ஆசிரியர்
திரு. எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
திரு. ம. மனோகர சிங்
கூடுதல் இயக்குநர்,

பொறுப்பாசிரியர்
திரு. வெ. இராமமூர்த்தி
மக்கள் தொடர்பு அலுவலர்,

நிதி நிர்வாகம்
திரு. எம். வி. சுப்ரமணியன்
நிதி ஆலோசகர்

ஆசிரியர் குழு
திரு. கோ. காந்தி காளிதாசன்
முதுநிலை மேலாளர் – கணினி

திருமதி. கா. காளத்தி
திட்ட ஒருங்கிணைப்பாளர், டி.என்.வி.ஆர்.சி.,

வாழ்ந்து காட்டுவோம் திட்டம்
திருமதி. மாலதி ஹெலன்
தகவல் தொடர்பு வல்லுநர்,

உதவி ஒருங்கிணைப்பாளர் – முற்றம்
திரு. ஏ. கண்ணன்

கணக்கர்
திருமதி. சு. சசிகலா

கணினி வடிவமைப்பு
திரு. மு. செல்வம்

பிழை திருத்துபவர்
திரு. எஸ். எஸ். ரவிச்சந்திரன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தபால் பெட்டி எண். 3226
100, அண்ணா சாலை, கிண்டி,
சென்னை – 600 032.
தொலைபேசி: 044-2230 1801,
4202 7635
தொலைநகல்: 044-4202 7635,
044-2235 2751

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து

முற்றம் வாசகர்கள் அனைவருக்கும் சுதந்திர தின நல்வாழ்த்துகள்.

நம் இந்திய தாய்த்திருநாடானது ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகள், அந்நியர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. முகலாயர்கள், ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள், போர்ச்சுகீசியர்கள், டச்சுக்காரர்கள் என பல்வேறு அந்நிய நாட்டினர் நம்மை அடிமைப்படுத்தி ஆட்சி புரிந்து வந்தனர். நம் நாட்டின் வளங்களையும், செல்வங்களையும் அபகரித்து சென்றதோடு மட்டுமல்லாமல், மக்களுக்கான வளர்ச்சித் திட்டங்களோ, அடிப்படை வசதிகளோ கிடைக்கப் பெறாமல் தடுத்து வந்தனர். அவர்களின் அதிகார அத்துமீறல்களையும், அநீதிகளையும் தட்டிக் கேட்டவர்களை நம் மக்களைக் கொண்டே ஒடுக்கி வந்தனர்.

அடிமைத்தனத்தின் கொடுமைகளை தாக்குப் பிடிக்க முடியாததின் விளைவு, மக்களிடையே சுதந்திர உணர்வானது துளிர்விடத் தொடங்கியது. சுதந்திரம் கேட்டு பல மக்கள் அமைப்புகளும், தலைவர்களும் உருவாகி, அந்நியர்களுக்கு ஒத்துழைக்க மறுத்தனர். மக்கள் ஒன்று திரண்டனர். மக்கள் சக்தி வலுவடையத் தொடங்கியது. போர்க்களத்தில் நேருக்கு நேர் நின்று போராடாமலும், உயிர்களுக்கு சேதம் ஏற்படாமலும், அறவழியில் அனைவரும் ஒன்றுபட்டுப் போராடத் தொடங்கினர். இந்தப் போராட்டம் வெள்ளையர்களை நிலைகுலைய வைத்தது. இனியும் தாக்குப் பிடிக்க முடியாது என்ற நிலையில் ஆங்கிலேயர்கள் நம் நாட்டிற்கு சுதந்திரம் கொடுத்து விட்டு வெளியேறினர். நம் நாட்டு வளங்கள் இனியும் சுரண்டப்படாமல், தக்க வைத்துக் கொள்ள வேண்டுமெனில், நேரிடையாகவோ, மறைமுகமாகவோ நாம் மீண்டும் அடிமைப்பட்டு விடக்கூடாது என்பது முக்கியமானதாகும்.

ஆண்டுதோறும் சுதந்திர தினத்தைக் கோலாகலமாக கொண்டாடுகிறோம். சுதந்திரத்திற்காகப் போராடியவர்களுக்கு நாம் அனைவரும் நன்றி உள்ளவர்களாக இருக்க வேண்டுமானால், அவர்களின் பொதுநல கொள்கைகளை தவறாமல் பின்பற்றுவதோடு, அவர்களின் கனவாகிய, நீதியான சமுதாயத்தை இந்த நாட்டில் உருவாக்க வேண்டும். இந்திய மக்கள் தங்கள் உரிமைகளை அச்சமின்றி பெற்றுக் கொள்ள வேண்டும். ஆயிரம் ஆண்டுகள் வளர்க்கப்பட்ட அடிமை மனப்பான்மை அறவே ஒழிக்கப்பட வேண்டும்.

சுதந்திரம் தவறாக பயன்படுத்தப்படக்கூடாது. வன்முறையின்றி பெற்ற சுதந்திர இந்தியாவில், ஆங்காங்கே வன்முறைகளும், தீவிரவாதமும் தலைதூக்குவது வருத்தத்திற்குரியதாகும். ஒரு சிலர் மட்டுமே ஆதிக்கம் செலுத்துவதற்காக, சாதியம், மதவாதம் போன்ற பிரிவினையைத் தூண்டும் நச்சுக் கருத்துக்களை, மக்களிடையே திட்டமிட்டு பரவச் செய்து, இந்திய நாட்டின் வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் தடுக்க நினைக்கின்றனர். அவர்களை அடையாளம் கண்டு ஒதுக்க வேண்டியது நம் அனைவரின் கடமையாகும். நாம் பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்திடுவோம்.

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)
முற்றம் ஆசிரியர்

பயனுள்ள கட்டுரை

கடந்த முற்றம் இதழில் வெளிவந்த கர்ப்பப்பை புற்று நோய் குறித்த கட்டுரையினை படித்தேன். பெண்கள் இந்நோய் தங்களை தாக்காமல் பாதுகாத்துக் கொள்ளும் வழிமுறைகளும், செய்ய வேண்டிய பரிசோதனைகளும் மிகவும் தெளிவாக இடம் பெற்றிருந்தது. பெண்களுக்கு மிகவும் பயனுள்ள கட்டுரையாகும் இது.

திருமதி. எம். தமிழ்ச்செல்வி
ரெட்ரோஸ் மகளிர் சுய உதவிக் குழு,
பேட்டை, திருநெல்வேலி.

பெருமையாக உள்ளது

வரலாற்றில் மகளிர் தொடரில் வெளிவரும் கட்டுரைகள் மிகவும் அருமையாக உள்ளது. எங்கோ பிறந்து நம் பாரத நாட்டு மகளிர் முன்னேற்றத்திற்காக பாடுபட்ட அன்னி பெசன்ட் அம்மையாரை பற்றிய கட்டுரையை படிக்கும் போது, பெண்கள் என்றுமே தியாகத்தின் திருவுருவங்கள் தான் என்பது பெருமை யாக உள்ளது.

செல்வி. ஆர். கவிதா,
செம்மலர் மகளிர் குழு,
பொறுவாய், புதுக்கோட்டை

www.tamilnaduwomen.org/murtram

தெள்ளத் தெளிவாக

நுகர்வோர் உரிமைகள் என்ன என்று தெள்ளத் தெளிவாக அறிந்து கொள்ளும் வண்ணம் சிறப்பாக உள்ளது முற்றம் இதழில் வெளிவரும் கட்டுரைத் தொடர். நுகர்வோரின் உரிமைகள், கடமைகள், கலப்படத்திற்கு எதிரான செய்திகள் போன்றவை மிகவும் நன்றாக உள்ளது.

திருமதி. பானுமதி ராஜேந்திரன்,
சிந்துநதிப்பூ மகளிர்
சுய உதவிக் குழு,
அரவங்காடு, நீலகிரி

தொலைபேசி வழிப் பாராட்டு

முற்றம் இதழ் மிகவும் அருமையாக உள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள் அருமை. வண்ண வடிவமைப்புடன் செய்திகளும், கட்டுரைகளும், குறிப்புகளும் பெண்களுக்கு மிகவும் உபயோகமாக உள்ளது. சுய உதவிக் குழு மற்றும் கூட்டமைப்புகள் துவக்கும் விபரங்களைக் கொண்ட தொடர் சிறப்பாக உள்ளது.

திருமதி. ஆர். வரலட்சுமி,
அன்னை சத்தியா மகளிர்
சுய உதவிக் குழு,
நெய்வேலி, கடலூர் மாவட்டம்.

மகளிர் முன்னேற்றத்திற்காக பாடுபட்ட அன்னி பெசன்ட் அம்மையாரை பற்றிய கட்டுரையை படிக்கும் போது, பெண்கள் என்றுமே தியாகத்தின் திருவுருவங்கள் தான் என்பது பெருமையாக உள்ளது

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், தங்கள் பகுதியில் நடைபெறும் சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவற்றை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். மேலும் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும்.

– ஆசிரியர், முற்றம்

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com wdcmutram@gmail.com

நா. தமிழரசி

தோழியரே, சமூகக் கண்ணோட்டத்தில் பின்தங்கியவர்கள், பாதிப்புக்கு அதிகம் ஆளாவோர் என்று நாம் குறிப்பிடுவது பெண்களையும், குழந்தைகளையும் தான். அவர்களை முன்னேற்றுவதற்கும், அவர்களின் உரிமைகளைப் பெற செயலாற்றிடும் பொழுது சட்டங்கள் நமக்கு ஒரு எல்லைக் கோடாக அமைகிறது. ஆனால் எவ்வளவு நல்ல சட்டமாக இருந்தாலும், அதனை அமுலுக்குக் கொண்டு வரும்வரை அந்த சட்டத்தால் ஒரு பயனும் இல்லை.

பெண்கள் துயர் நீக்கும்

விவாகரத்துச் சட்டம், 1869

சட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும் என்றால், சட்டங்களை அமுல்படுத்த வேண்டிய அதிகாரிகள் மட்டுமின்றி, பொதுமக்களாகிய பெண்களும் அதனைப் பற்றி அறிய வேண்டும் என்ற நோக்கில் சில சட்டங்களைக் குறித்த விவரங்களை (சட்ட பிரிவுகளுடன்) விரிவாக உங்களுடன் பகிர்ந்து கொண்டோம்.

சென்ற மாதம் விவாகரத்துச் சட்டம் குறித்து சில விவரங்களைத் தெரிவித்தோம். இதில் தெரிவித்த கருத்துக்கள் என்ன என்று பார்ப்போம்

1. விவாகரத்து வழக்கு எங்கு தொடுக்கலாம்?
2. நீதிமன்றத்தின் அதிகார எல்லை என்ன?
3. இச்சட்டம் அமுலுக்கு வரும் முன் நிலுவையில் இருந்த வழக்குகள் எப்படி கையாளப்பட வேண்டும்?
4. எந்தக் காரணங்களின் அடிப்படையில் விவாகரத்து கோரலாம்?
5. தவறான அடிப்படையில் விவாகரத்துக் கோரினால் நீதிமன்றம் எடுக்கும் நடவடிக்கைகள் என்ன?

இதுதவிர வேறு என்ன விவரங்கள் இந்தச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது எனப் பார்ப்போமா...

ஒரு பெண் கொடுமைக்கு ஆளானாலோ, கணவர் வேறு ஒருவருடன் உறவு வைத்திருந்தாலோ, கை விட்டுச் சென்று விட்டாலோ, விவாகரத்து தவிர சட்டப்படியாக நீதி மன்றத் தின் மூலம் பிரிவதற்கு உத்தரவு கேட்கலாம்.

இவ்வாறு விவாகரத்து அல்லது பிரிவு உத்தரவு பெற்ற பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், தங்களுடைய சொத்தையோ, எதிர்காலத்தில் வாங்கக் கூடிய சொத்தையோ, எப்படி பாதுகாக்கலாம்? ஏனெனில் சிலர் விவாகரத்திற்குப் பிறகும் பிரச்சனை செய்யலாம். அந்த சமயம் பாதுகாப்பு உத்தரவும் கேட்கலாம்.

பாதுகாப்பு உத்தரவு பெற்ற பின்னரும் கணவரோ அல்லது அவரது கடன்காரர்களோ சொத்தை அபகரித்தால் என்ன செய்யலாம்?

வழக்கு தொடரலாம். அப்பொழுது கணவன் சொத்தை திருப்பித் தர வேண்டும். மேலும் சொத்து மதிப்பு போல் இருமடங்கு பணம் தர நீதிமன்றம் உத்திரவிடலாம்.

அடுத்து முக்கியமாக உங்கள் முன் எழும் கேள்வி என்னவெனில் குழந்தைகளின் நிலை என்ன?

குழந்தைகளின் பராமரிப்பு, கல்வி மற்றும் பொறுப்பு பற்றி இடைக்கால ஆணைகளை நீதிமன்றம் பிறப்பிக்கும். இறுதி உத்தரவிலும் குழந்தைகள் பராமரிப்பு, கல்வி குறித்த ஆணையினை நீதிமன்றம் பிறப்பிக்கும்.

குழந்தைகள் பொறுப்பு தமக்கு வேண்டும் என தனியே மனு செய்யலாமா?

செய்யலாம். அந்த மனுவினை நீதிமன்றம் அறுபது நாட்களுக்குள் விசாரித்து முடிவு செய்யும். விவாகரத்து கேட்கும் சமயத்திலும், விவாகரத்து பெற்ற பிறகும்,

ஒரு பெண் தன்னுடைய எதிர்காலத்தை எப்படி அமைத்துக் கொள்வது என்ற எண்ணம் எல்லோர் மனதிலும் எழும்.

அப்பெண் தன்னைத் தானே பராமரித்துக் கொள் ளவும், வழக்கு நடத்தவும், வாரந்தோறும் அல்லது மாதந்தோறும் அளிக்க கட்டளையிடலாம். வழக்கிற்கு பிறகு கணவன், தன் சொத்திலிருந்து மொத்தமாக ஒரு தொகையை அல்லது மாதந் தோறுமோ அல்லது கால முறையிலோ, அவன் உயிருடன் இருக்கும் காலம் வரையில் அளித்து வருவதற்கு கட்டளையிடலாம்.

விவாகரத்து பெற்ற பெண் சட்டப்படி மீண்டும் மணம் செய்ய வழி உள்ளதா?

திருமணம் இரத்து செய்யப்பட்டு அல்லது திருமணம் செல்லாது என்று நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டு, அந்த உத்தரவின் மீது குறித்த காலக்கெடுவிற்குள் மேல் முறையீடு செய்யாமல் இருந்தால் மறுமணம் செய்து கொள்ளலாம்.

தோழியரே,

கைம்பெண் நிலை சமுதாயத்தில் என்ன என்று அறி வோம். இதுபோன்றதுதான் விவாகரத்துப் பெற்ற பெண்ணின் நிலையும். அப்பெண்ணையும், அவள் சோகத்தையும் அறிந்து, புரிந்து, அவளுக்கு நல்ல ஒரு வாழ்க்கை அமைந்திட நாம் பக்க பலமாக இருப்போம்.

> தன் சொத்திலிருந்து மொத்தமாக ஒரு தொகையை அல்லது மாதந்தோறுமோ அல்லது கால முறையிலோ, அவன் உயிருடன் இருக்கும் காலம் வரையில் அளித்து வருவதற்கு கட்டளையிடலாம்.

பெண்களே,

சென்ற மாதம் ஏற்கனவே கூறியபடி, கணவன் மனைவி இருவரும் பிரச்சினைகளை, அபிப்பிராய பேதங்களை முதலில் பேசித் தீருங்கள். குடும்பத் தாரின் ஆலோசனைகளைப் பெறுங்கள். குடும்ப நல ஆலோசனை மையங்களை அணுகி, சமூகத் தீர்வு காண முயலுங்கள். குடும்பத்தை கோவில் ஆக்குவதும், போர்க்களம் ஆக்குவதும் கணவன் மனைவி இருவரின் கையில்தான் உள்ளது. தீர்க்கவே முடியாத பிரச்சனை என்று இருந்தால் மட்டுமே இச்சட்ட உதவியை நாடுங்கள்.

பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு ஒதுக்கியது செல்லும்

உயர்நீதி மன்றம் தீர்ப்பு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் பெண்களுக்கு 30 விழுக்காடு இடத்தை ஒதுக்கியது செல்லும் என்று சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இது குறித்த விபரம் கீழ்வருமாறு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சில பதவிகளுக்கு குரூப் 1 தேர்வுக்காக கடந்த 2007ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1ம் தேதி அறிவிப்பு வெளியிட்டிருந்தது. இந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ள பணியிடங்களில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் மிகவும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஆண்களுக்கு கட்–ஆப்மார்க் 196.5 என்றும், பெண்களுக்கு கட்–ஆப் மார்க் 180 என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த மதிப்பெண் வேறுபாட்டினால் தனக்கு பாதிப்பு ஏற்படும் என்றும், பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் வகையில் வெளியிட்டுள்ள தேர்வாணையத்தின் அறிவிப்பை இரத்து செய்ய வேண்டும் எனவும், பெண்களுக்கு 30 விழுக்காடு ஒதுக்குவது சட்ட விரோதமானது என அறிவிக்க வேண்டும் எனவும், நேரடித் தேர்வில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்ததற்கான அரசு கூறும் காரணம் நியாயமற்றதாக உள்ளது, இந்த ஒதுக்கீட்டிற்கும், பெண்கள் முன்னேற்றத்திற்கும் எந்த தொடர்பும் இல்லாததால் இந்த இட ஒதுக்கீட்டை இரத்து செய்ய வேண்டும் எனக் கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

தலைமை நீதிபதி எச். எல். கோகலே, நீதிபதி டி. முருகேசன் ஆகியோர் இந்த வழக்கை தள்ளுபடி செய்தனர். நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் கூறியிருப்பதாவது

“பெண்களுக்கு 30 விழுக்காடு உள்ளது என்றும், ஆனால் இட ஒதுக்கீடு முறையைப் பின்பற்றித்தான் நிரப்பப்படும் என்றும் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. எனவே இந்த அறிவிப்பு நியாயமானதுதான். ஏற்கனவே இரயில்வேக்கு ஆள் தேர்வு செய்வதிலும், வெளி மாநிலங்களில் பெண்கள் கல்லூரி வழக்குகளிலும் பெண்களுக்கு இட ஒதுக்கீடு முறை நியாயமானதுதான் என்று ஏற்கனவே சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்கியுள்ளது. சமுதாயத்தில் பின்தங்கி உள்ளவர்களை அதிலிருந்து வெளிக்கொண்டு வர அரசியல் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முறையே இட ஒதுக்கீடு முறையாகும்.

மேலும் கூடுதல் அட்வகேட் ஜெனரல் பி. எஸ். ராமன் வாதாடுகையில், சமீபத்தில் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து தெரிவித்தார். மகளிர் இட ஒதுக்கீடு மசோதா நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். எனவே இந்த பெண்களுக்கான இட ஒதுக்கீடு நியாயமற்றது. பாரபட்சமானது என்பதை ஏற்க முடியாது. அரசியல் சட்டத்துக்குட்பட்டதுதான். ஆகவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது” என்று நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் கூறியுள்ளனர்.

30% விழுக்காடு

முறையான சிகிச்சைகளும், வழிகாட்டுதல்களும் இல்லாததால் அல்லது இருந்தும் எடுத்துக் கொள்ளாததாலும் பலர் தலைவலியை முற்றவிட்டு, பக்க வாதம் உட்பட வேறு சில ஆபத்தான நோய்களுக்கு ஆட்படுகிறார்கள். சிலருக்கு கண்பார்வை கூட மங்கிப் போகும் வாய்ப்பு இதனால் உருவாகிறது.

ஒற்றைத் தலைவலி

மைக்ரேன் எனப்படும் தலைவலி ஒரே பக்கமாக வலிக்கக் கூடிய தலைவலி என்றாலும், தலை முழுவதும் வலி தெரியும். தலையின் மேல் பகுதியிலோ, பக்கவாட்டிலோ துடிப்பது போலவும், அடித்துக் கொள்வது போலவும் லேசாக வலி ஆரம்பிக்கும். படிக்கட்டில் ஏறும்போது, வீட்டு வேலைகளைச் செய்யும் போது வலி கூடும். ஒலியைக் கேட்கவோ, ஒளியைப் பார்க்கவோ கூச்சமாக இருக்கும். கூடவே குமட்டலும், வாந்தியும் வரும்.

தலைவலியின் வகைகள்

ஒற்றைத் தலைவலி கிளாசிக் மைக்ரேன் மற்றும் பொதுவான மைக்ரேன் என இரண்டு வகைகளில் அறியப்படுவதாக உள்ளது.

1. கிளாசிக் மைக்ரேன்

தலைவலியின் போது நரம்பு தொடர்பான அறிகுறிகள் தென்படுவதை இது குறிக்கும். அதாவது தலைவலி வருவதற்கான அறிகுறிகள் இல்லாமல், நோய் வருவது போன்ற உணர்வு மட்டும் எழுவது. தலையில் நெற்றிப் பொட்டில், பொட்டெலும்பு, பின் தலை போன்ற இடங்களில் இதன் வலி தெரியும். கண்கள், தாடை, முதுகு போன்ற இடங்களில் வலி ஏற்படும். பேச்சுக் குழறுதல், கவனமின்மை, மனநோய் போன்றவை இதனால் வர வாய்ப்புண்டு. தற்காலிகமாக பார்வையில் கோளாறு, உணர்வில் கோளாறு, கண்களுக்குள் மின்னல் போன்ற ஒளிக்கீற்று வந்து மறைதல் போன்றவை ஏற்படும்.

நெற்றிப் பொட்டிலும், கண்ணிலும் வலி ஏற்பட்டு, வலி அதிகரிப்பதால் சிலர் தாங்க முடியாமல் தவிப்பார்கள். எதிலாவது தலையை முட்டிக் கொண்டு அழுவது கூட உண்டு. கை, கால்களை பலவீனப்படுத்தும் இந்த வலி இரண்டு நாட்களுக்கு ஒருமுறை கூட வரலாம்.

2. பொதுவான மைக்ரேன்

மன நிலையில் பாதிப்பு, சோர்வுறுதல், மனப்பதட்டம் ஆகியவற்றால் இத் தலைவலி ஏற்படும். இது தொடர்ந்து மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு இருந்தால், குமட்டல், வாந்தி, வயிற்றுப் போக்கு போன்றவை ஏற்படும்.

பொட்டெலும்பு, பின்பக்கத் தலை போன்ற இடங்களில் இதன் வலி தெரியும். கண்கள், தாடை, முதுகு போன்ற இடங்களில் வலி ஏற்படும். பேச்சுக் குழறுதல், கவனமின்மை, மனநோய் போன்றவை இதனால் வர வாய்ப்புண்டு.

ஒற்றைத் தலைவலி எதனால் ஏற்படுகிறது?

மூளை இயங்குவதற்குத் தேவைப்படும் செரடோனின் என்ற திரவத்தின் அளவு குறையும் போது இந்த தலைவலிகள் ஏற்படு கின்றன. தலைக்குச் செல்லும் நரம்புகள் சுருங்கி இரத்த ஓட்டம் தடைபடுவதால்தான் இந்த வலிகள் ஏற்படுவதாக ஆய்வாளர்கள் நம்பினார்கள். புதிய கண்டுபிடிப்புகளின்படி மூளையைச் சேர்ந்த சில செல்களில் ஏற்பட்டுள்ள

பரம்பரைக் குறைபாடுகள்தான் காரணம் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். மூளைக்குச் செல்லும் இரத்த ஓட்டம் தடை படும் போது மூளைக்குச் செல்லும் செல்கள் அழிந்து போக வாய்ப்புகள் உண்டு. அதனால் தலைவலி ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

ஒற்றைத் தலைவலி பரம்பரை நோயா?

ஒற்றைத் தலைவலி பரம்பரையாக வரக் கூடியது என்று சொல்லப்படுகிறது என்றாலும், திட்டவட்டமாகக் கூற முடியவில்லை. கணவன், மனைவி இருவருக்கும் ஒற்றைத் தலைவலி இருந்தால் பிள்ளைகளுக்கு வர வாய்ப்புண்டு.

நிவாரணம் பெற நம்பிக்கையான வழிகள்

அறிகுறிகளை வைத்தே ஒற்றைத் தலைவலியை நெருங்க விடாமல் செய்ய முடியும். இதற்குப் பல வழிகள் இருந்தாலும் உங்களுக்கு உதவ சில வழிகள்

1. உணவு முறையில் மாற்றம்

சரியாக உணவு உண்ணாததும், ஒத்துக் கொள்ளாத சில உணவு வகைகளை உண்பதும், அளவுக்கு அதிகமாக உண்பதும் ஒற்றைத் தலைவலிக்கு முக்கியக் காரணங்களாகும். இதனால் நல்ல, ஆரோக்கியமான உணவை, வேளை தவறாமல் எடுத்துக் கொள்ள வேண்டும். பால், காய்கறி வகைகள் போன்றவற்றை உண்ணலாம். இறைச்சி வகைகளைத் தவிர்க்க வேண்டும்.

2. முறையான தூக்கம்

தூக்கமில்லாமல் அவதிப்படுபவர்கள் காலையில் எழுந்ததும் தலைவலிப்பதாகச் சொல்வது வாடிக்கையாகி விட்டது. அதனால் நல்ல தூக்கம் வரச் செய்யும் வழி முறைகளைத் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக தூக்கம் வரும் வரைப் படிப்பது.

3. உடற்பயிற்சி

உடற்பயிற்சிதான் உடலில் உள்ள வேதிப்பொருட்களை உற்பத்தி செய்யும் தன்மை கொண்டது. இதனால் மூளை நன்கு செயல்படத் தொடங்கும். முறையான தொடர் உடற்பயிற்சி இருந்தாலே ஒற்றைத் தலைவலி நெருங்காது.

4. சுற்றுச் சூழலில் கவனம்

அதிக சூரிய வெப்பம் படுதல், வானிலை மாற்றங்கள், காற்றோட்டமில்லாத புழுக்கமான சூழலில் வாழ்தல் ஆகிய சுற்றுச் சூழல்களாலும் சிலருக்கு தலைவலி வரும். அதனால் இவற்றைத் தவிர்த்தல் வேண்டும். காற்றோட்டமுள்ள இடத்தில் தூங்குவதும், மலச்சிக்கல் வராமல் பார்த்துக் கொள்வதும் மிக அவசியம்.

5. மது, புகை, காபி போன்றவற்றை தவிர்த்தல்

மது அருந்துதல், புகை பிடித்தல், காபி குடித்தல் போன்றவை சிலருக்கு தலைவலியை உண்டாக்கும். இவை முற்றிலும் நிறுத்தப்படல் வேண்டும். சிலருக்குக் காப்பி சாப்பிட்டால் தலைவலி நிற்பது போல் தெரியும். ஆனால் அது நிரந்தரமற்றதாகும்.

6. கவலை, சோர்வு, மன அழுத்தம் போன்றவை வேண்டாம்

அதிகமாகக் கவலைப்படுபவர்கள், அடிக்கடி சோர்வு அடைபவர்கள், மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அடிக்கடி ஒற்றைத் தலைவலி வரும். இவற்றில் இருந்து விடுபட மற்றவர்களுடன் நட்பாகப் பேசிப் பழக வேண்டும். மனம் விட்டுப் பேசி குறைகளைக் களைய வேண்டும்.

7. தடுப்பு முறைகள்

ஒற்றைத் தலைவலி எதனால் வந்தது என்பதை அறிந்து கொண்டு, அவற்றைத் தவிர்த்தலே மிக நல்லது. உதாரணமாக ஒரு நிகழ்ச்சிக்குப் போனால் தலைவலி வந்திருக்கும். திரும்பவும் அந்த நிகழ்ச்சியைக் காணாது தவிர்த்தல், சில பொருட்கள் ஒவ்வாமை ஏற்பட்டு தலைவலி கொடுத்திருக்கும் அவற்றைத் தவிர்த்து முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளலாம்.

8. மருந்துகள்

அதிக அளவில் மருந்துகள் எடுத்துக் கொள்வதும், சிலருக்குத் தலைவலி வரக் காரணமாக இருக்கும். இதனால் மருத்துவர் ஆலோசனைப்படி மட்டுமே மருந்துகள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

நம் நாடு பெற்றுள்ள சுதந்திரத்தின் பயன்கள் ஏழை எளிய மக்களுக்கு தங்கு தடையின்றி கிடைத்திட வேண்டும்

மக்களின் வாழ்வு மேலும் வளம் பெற்று சமூக, அறிவியல், பொருளாதாரத்தில் தொடர்ந்து முன்னேறி தமிழகம் முதல் மாநிலமாகத் திகழ பாடுபடுவோம். சுதந்திர தினத்தையொட்டி தமிழக அரசின் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து ஆற்றிய உரையில் முதல்வர் கலைஞர் சபதம்

மேலும், 'தமிழக மக்களுக்கு குறிப்பாக ஏழை எளியவர்களின் வாழ்வு மேலும் மேலும் வளம் பெற வேண்டும். சமூக, அறிவியல், பொருளாதார நிலைகளில் தொடர்ந்து முன்னேறி எல்லா வகையிலும் இந்தியாவில் தமிழகமே முதல் மாநிலம் எனும் நிலை உறுதி செய்யப்பட வேண்டும் என்னும் விழைவோடு, ஒவ்வொரு நொடி நேரத்தையும் எண்ணி எண்ணி செலவிட்டு வருகிறது இந்த அரசு' எனவும் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார்.

பல்வேறு சிறப்பு அம்சங்களுடன் சென்னையில் மகளிர் சிறப்பு ரயில் போக்குவரத்து

அரக்கோணம் – சென்னை கடற்கரை, தாம்பரம் – சென்னை கடற்கரை மற்றும் வேளச்சேரி – சென்னை கடற்கரை ஆகிய வழித் தடங்களில் பெண்கள் மட்டுமே பயணம் செய்யும் மகளிர் சிறப்பு ரயில் சேவை துவக்கப் பட்டுள்ளது. 9 பெட்டிகளைக் கொண்ட இந்த ரயிலில் 4,500 பெண்கள் பயணிக்க முடியும். இந்த ரயிலில் கார்டு, பயணச் சீட்டு பரிசோதகர் போன்ற அனைவரும் பெண்களே. இந்த ரயில்களின் அனைத்துப் பெட்டிகளிலும் பொருத்தப்பட்டுள்ள மின்னணு பலகைகளில் அடுத்து வரும் ரயில் நிலையங்களின் பெயர் ஒளிரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

> அவர் எழுதிக் கொடுத்தார். விசாலாட்சி விவாகம் என்று. நான் விசாலாட்சி விவாதம் என்று அச்சுக் கோர்த்தேன். தூக்க வேளை, கொஞ்சம் துக்கமுங்கூடத்தான். எனவே, தவறு மேல் தவறாகி விட்டது. சாமி காவடியானந்தர் என்று தெளிவாகத்தான் அவர் எழுதினார். நானோ அதை காமி சாவடியானந்தர் என்று பிழையுடன் அச்சிட்டேன். அதுபோலவே, காசு மாலை–காமாலை, மணி அரசு–பிணி அரசு, விசாலம்–விசாரம், வேதம்–பேதம், மொய்–பொய் என்று பிழைகள் ஏற்பட்டு விட்டன.

என் அஜாக்ரதையினால். துண்டு விசயந்தான் இவ்வளவுக்கும், அதிலும் எங்கள் ஆசிரியர் மணி மணியாக எழுதுவார் – அதாவது, எழுத்துக் கோர்வையாக, அச்சுப் போலவே இருக்கும். விசயம் இருக்கட்டும், அதுதானா முக்கியம். அவருக்குப் பக்கம் பக்கமாக எழுத வேண்டிய வேலை கிடையாது. சுருக்கி எழுதுவதுதான் சூட்சமம் என்பது அவருடைய இலட்சியம். பத்திரிக்கையின் பக்கங்கள், பேனாவின் தயவினாலே அல்ல, காரியாலயக் கத்தரிக்கோலின் கருணையால் அழகாக இருக்கும்.

தம்பி இது ஒரு பிரபல திருமணம்! அழகாக அச்சிட்டு, இந்த விலாசத்துக்கு ஐம்பது பிரதிகள் அனுப்பி வைக்க வேண்டும் தெரிகிறதா? என்று கூறித் தாளைக் கொடுத்தார். நாளை மறுநாள் வருகிறேன் என்று துணை ஆசிரியரிடம் கூறினார். துரிதமாக வெளியே சென்றார். தீபாராதனைக்குக் கற்பூரம் சரியாகக் கிடைக்காது கஷ்டப்பட்ட பக்தர்களின் தூதுக் கோஷ்டி, அன்று கலெக்டர் பிரவுன் துரையைக் காணப் புறப்பட்டது. அவர் ஒரு கிராம வைத்தியசாலை திறப்பு விழாவுக்குச் சென்றிருந்தார். அந்தக் கிராமத்துக்குக்

அறிஞர் அண்ணா அவர்களின் சிறுகதை

வேலை போச்சு...

கிளம்பிற்று தூதுக்கோஷ்டி. எங்கள் ஆசிரியர் தூதுக் கோஷ்டிக்குத் தலைவர். பெயரும் பொருத்தந்தான்.

> இது ஒரு பிரபல திருமணம்! அழகாக அச்சிட்டு, இந்த விலாசத்துக்கு ஐம்பது பிரதிகள் அனுப்பி வைக்க வேண்டும் தெரிகிறதா? என்று கூறித் தாளைக் கொடுத்தார். நாளை மறுநாள் வருகிறேன் என்று துணை ஆசிரியரிடம் கூறினார். துரிதமாக வெளியே சென்றார்.

அனுமந்தர் – அவருடைய திருநாமம். சில சமயம் வீட்டிலே சிரமப்படுவதுண்டு, தன்னுடைய மனைவியைப் பெயரிட்டு அழைக்க, அம்மையாருக்குச் சீதாலட்சுமி என்று பெயர் இருந்தது. ஆமாம்! இவ்வளவு கூறிய நான், பத்திரிக்கையின் பெயரைக் கூறவில்லையே பாருங்கள், அவ்வளவு மறதி எனக்கு. வியாசர் எங்கள் பத்திரிக்கையின் பெயர்.

வியாசர் பத்திரிக்கை ஆசிரியர் அனுமந்தர், தன் பாரியை சீதாலட்சுமியிடம் விடை பெற்றுக் கொண்டு, துணை ஆசிரியர் கருடாழ்வாரை நிர்வாகத்தைக் கவனிக்கும் பொறுப்பில் அமர்த்தியதும், கிண்டி குதிரைப் பந்தயத்திலே அந்தக் கிழமை ஓடும் அசுவ இலட்சண விளக்கப் புத்தகத்திலே அவர் ஈடுபட்டு, ஆசிரியர் தந்த செய்தியை நான் அவசரத்திலே, அச்சுப் பிழையுடன் செய்து கொடுத்த போது, ஏண்டா தம்பி! (என்னை எல்லோரும் தம்பி! தம்பி!! என்று கூப்பிடுகிறார்களே, இவன் சிறு பயலோ என்று சந்தேகிக்காதீர்கள். எனக்கு வயது 40, என் பெயர் தம்பியப்பன்) சரியாகத்தானே செய்தாய்?... என்று கேட்டுவிட்டு, ஒருமுறை ஒப்புக்கு அதைப் பார்த்து, சரி போடு என்றார்.

மெஷின், அந்த அபத்தத்தை ஏற்க மறுக்குமா என்ன? அச்சுப் பிழை மட்டுமா, எவ்வளவோ கருத்துக் கோளாறுகளைத் தாங்கித் தாங்கி, உரம் பெற்றதாயிற்றே. அது மளமளவென்று,

அடித்துத் தள்ளிவிட்டது. பொழுது பளபளவென விடிந்ததும், பத்திரிக் கையைப் பார்சல் செய்யும் வேலை மடமடவென்று நடந்தது.

இரண்டாம் நாள் இரவு! தடதடவென்று கதவைத் தட்டினான் ஆபீஸ் பையன். திறந்தேன்! திடுக்கிட்டேன்! அவசர அழைப்பு ஆசிரியரிடமிருந்து! – ஓடினேன், கிடுகிடுவென்று.

தம்பி! தலையிலே கல் போட்டாயே! என்றார் ஆசிரியர் அனும ந்தர். கருடாழ்வாரைக் காணோம். பத்திரிகைக்கு அவர் கொடுத்த தாளை எடுத்து வரச் சொன்னார். கொண்டு வந்தேன். படி! என்றார். படித்தேன். அது இது

மாலையிலே
அருமையான சங்கீதக் கச்சேரி
நடைபெற்றது. ஆனால் ஒரு விசயம்
இங்குக் குறிப்பிட வேண்டி இருக்கிறது. சங்கீதம்,
சாஸ்திரோக்தமாக இல்லை, அது என்னவோ தமிழ்
இசை என்று சிலர் கூறுவார்களே, அதுவாம் அது.
ஊர்வலம் நடைபெற்றது. ஊரெங்கும்
இதே பேச்சு.

பிரபல திருமணம்

பல சரக்குக் கடையின்றிப் பிரபஞ்சம் நிலைக்குமா? முடியாது. நமது ஊரிலே, பல சரக்குக் கடைகள் பல இருந்தாலும் பண்டரி விலாஸ் கடைக்கு ஈடாகுமா? ஆகாது. அந்தக் கடைக்கு முடிசூடா மன்னராக விளங்கும், முகுந்த ராஜன் அவர்களின் மூத்த குமாரி, சௌபாக்கியவதி விசாலாட்சி அம்மாளின் விவாகம், விமரிசை யாக இன்று காலை நடைபெற்றது. மணமகன் மணிஅரசு, ஜெகஜோதி யான வைரக்கடுக்கன்கள் அணிந்து காட்சி அளித்தார். ஸ்ரீமதி விசாலம் புதிய காசுமாலையுடன் காட்சி தந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. ஸ்ரீமான் முகுந்தராஜன் அவர்களின் வைதிக சிரத்தையை அறிந்த புரோகிதர்கள், காலையிலேயே வேதம் ஓதினர். இது புதிய முறையல்ல, பழைய ராஜாக்கள் காலத்திலே இதுவே சம்பிரதாயம். மாங்கலியதானம் முதலிய சர்வ சம்பிரதாயக் காரியங்களும் இனிது நிறைவேறிய பிறகு, உள்ளூர் – வெளியூர்ச் சீமான்கள் மொய் எழுதினர்.

மாலையிலே அருமையான சங்கீதக் கச்சேரி நடைபெற்றது. ஆனால் ஒரு விசயம் இங்குக் குறிப்பிட வேண்டி இருக்கிறது. சங்கீதம், சாஸ்திரோக்தமாக இல்லை, அது என்னவோ தமிழ் இசை என்று சிலர் கூறுவார்களே, அதுவாம் அது. ஊர்வலம் நடைபெற்றது. ஊரெங்கும் இதே பேச்சு. இவ்வளவுக்கும் சிகரம் வைத்தது போல இருந்தது, காலையும் மாலையும் கலியாணத் துக்குச் சாமி காவடியானந்தர் விஜயம் செய்தது. அவர் நமது ஆசிரியரிடம் அன்யோன்யமாகப் பேசியது கண்டு, கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்று பலர் கூறினர். முகஸ்துதியில் பிரியமில் லாத நமது ஆசிரியர், அந்தப் புகழுரையைக் கேட்டும் கேட்காதவர் போலிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதுதான் ஆசிரியர் தந்தது. இதிலேதான், விசாலம் விசாரமாகி, விவாதம் விவாதமாகி, காசுமாலை காமாலையாகி, மணி அரசு பிணி அரசாகி, வேதம் பேதம் என்றாகி, மொய் பொய் என்றாகி வெளிவந்தது. எல்லாம் அச்சுப் பிழைதான். ஆனால் ஆசிரியரோ தம்பி என் வாழ்க்கையையே வதைத்து விட்டாயே! என்று போட்ட கூச்சல், உண்மையாகவே நான் செய்த பிழை மிகமிகக் கொடுமையானது என்று உணர்த்திற்று. உரத்தக் குரலிலே கூறிவிட்டார். உன் கணக்குத் தீர்த்தாகி விட்டது! வேலைக்கு வேண்டாம் இனி! போ வெளியே! என்றார். வெளியே சென்றேன். வேறென்ன செய்ய முடியும்? ஒரு துண்டு விசயத்தை இவ்வளவு அச்சுப் பிழைகளுடன் வெளியிட்டால், அச்சுக் கோர்ப்பவனுக்கு அலுவல் கிடைக்கத்தான் செய்யாது. என்ன செய்வது, ஏக்கம் கொண்டேன், தூக்கம் வரவில்லை.

வேலை இல்லை என்ற உடனே வேலாத்தா – என் மனை விக்கு குலதெய்வத்தின் பெயரையே வைத்து விட்டார்கள் – கொண்ட கோபம் இருக்கிறதே, இவ்வளவு அவ்வளவு என்று சொல்லி முடியாது. ஒரு நாளைக்கு ஒரு வேளை, சோத்திலே தப்பித் தவறி ஒரு கல் இருந்து விட்டா, என்ன கோபம் வருது உங்களுக்கு? இத்தனை காலமா அச்சாபீசு வேலையிலே இருக்கீங்க, இவ்வளவு தப்புச் செய்றீங்க, எவன் கொடுப்பான் வேலை? என்று பேசினாள். பேசினாள் என்று ஒப்புக்குச் சொல்றேன். அவ போட்ட கூச்சல் இருக்கே! வேலாத்தாளே (குலதெய்வம்) வந்தது போலிருந்தது. என்னால் வேதனையைத் தாங்க முடியவில் லை. சே! குடும்பமும் வேண்டாம்! இந்தக் குடைச்சலும் வேண்டாம்! பேசாம வீட்டை விட்டு வெளியேறினேன். நடந்து கொண்டே யோசித்தேன்.

வேலாத்தா போல ஊரிலே எத்தனையோ அம்மணிகள் இருப்பார்களே, அவர்களிடந்தானே போய் பிச்சை கேட்கணும். தடியனாட்டம் இருந்து கொண்டு பிச்சை எடுக்க வந்து விட்டாயா? என்று ஏசுவார்களே என்ற பயம் பிறந்தது. சரி, நிஜமாகவே சன்யாசி ஆக வேண்டியதில்லை! ஒரு நாளைக்காவது, வீட்டுக்குப் போகாமலிருப்போம்! வேலாத்தா என்னமோ ஏதோ என்று அழட்டும்! என்று எண்ணினேன். எங்கெங்கோ சுற்றி விட்டு, இரவு பத்து மணி சுமாருக்கு, ஊர்க்கோடிச் சாவடியிலே போய்ப் படுத்தேன். அரைத் தூக்கம், அந்தச் சமயத்திலே, நமச்சிவாயம்! என்று சத்தம் கேட்டது. சாவடிக்கு, சாமி காவடியானந்தர் வந்தார். நான் படுத்திருந்த மூலையிலிருந்து எழுந்திருக்கவும் இல்லை, பேச்சுக் குரல் கொடுக்கவுமில்லை.

குடும்பமும்
வேண்டாம்! இந்தக்
குடைச்சலும் வேண்டாம்! பேசாம
வீட்டை விட்டு வெளியேறினேன்.
நடந்து கொண்டே
யோசித்தேன்.

நல்லவேளையாக அவர் என்னைப் பார்க்கவில்லை. பார்த்து விட்டால் என்ன செய்வது என்ற திகில் எனக்கு. அடே பயலே! நீதானே என்னை காமி சாவடியானந்தா என்று அச்சடித்தது? என்று கேட்டு, ஏதாவது மந்திரம் போட்டு விட்டால் என் கதி என்ன ஆகும்? நானோ பிள்ளைக் குட்டிக்காரன். வாய் திறவாமல் சுருட்டிப் படுத்துக் கொண்டிருந்தேன்.

வெற்றியை நோக்கி

ஒரு பயணம்

ப. சஞ்சீவ் குமார்

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதர, சகோதரிகளே, வணக்கம். வெற்றியை நோக்கி ஒரு பயணம் இரண்டாம் பகுதியில் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். சென்ற பகுதியில் சுய உதவிக் குழுவுக்கு முன்னர் வங்கிகளின் நிலை, சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சி மற்றும் கடந்த கால பெண்களின் நிலை போன்றவற்றை பார்த்தோம்.

இப்பகுதியில் ஒரு சுய உதவிக் குழு எவ்வாறு தொடங்க வேண்டும்? சுய உதவிக் குழுக் கூட்டங்களை எவ்வாறு வெற்றிகரமாக நடத்துவது? போன்றவற்றை விரிவாக பார்ப்போம்.

ஒரு சுய உதவிக் குழு எவ்வாறு துவங்க வேண்டும்?

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு"

(விளக்கம் – ஒரு செயலை நன்கு ஆராய்ந்து முடிவு செய்து தெளிவுடன் துவங்க வேண்டும். அவ்வாறு துவங்கிய பின் தயங்குவது நமக்கு அவமானம் ஆகும்.) அதுபோல ஒரு சுய உதவிக் குழுவை ஆரம்பிக்கும் போது அதன் நன்மை, தீமைகளை நன்றாக ஆராய்ந்து முடிவு செய்து ஒரு தெளிவுடன் துவங்க வேண்டும். ஆரம்பித்தபின் சிறிது தயங்கினால் கூட தோல்வியை சந்திப்பது உறுதியாகிவிடும்.

ஒரு கிராமத்தில் ஒரே பகுதியில் வசிக்கும் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ள பெண்கள் 12 முதல் 20 நபர்கள் ஒன்று சேர்ந்து மகளிர் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனம் அல்லது கூட்டமைப்பை அணுகி சுய உதவிக் குழு அமைக்கும் விருப்பத்தை தெரிவிக்க வேண்டும். அதிலிருந்து அலுவலர்கள் வருகை தந்து சுய உதவிக் குழு திட்டம் மற்றும் விதிமுறைகளை விளக்குவார்கள். அக்கூட்டத்திலேயே நாம் குழு பெயர், பொறுப்பாளர்களை முடிவு செய்து விடக் கூடாது.

> "சுய உதவிக் குழுக் கூட்டங்கள் குழுவின் சேமிப்பை வளர்க்கவும், திறமைகளை அதிகப்படுத்தவும், பிரச்சனைகளைத் தீர்க்கவும் மிகவும் உதவுகிறது."

கூட்டம் முடிந்தவுடன் உறுப்பினர்கள் வீட்டிற்கு சென்று அவரவர் குடும்பத்தினருடன் இந்த சுய உதவிக் குழுவின் திட்டத்தைப் பற்றி நன்றாக விவாதிக்க வேண்டும். இதன் பிறகு இந்தத் திட்டத்தில் சேர்ந்து செயல்படுவதற்கு குடும்பத்தின் அனுமதியைப் பெற வேண்டும். இவ்வாறு அனைத்து உறுப்பினர்களும் அவரவர் குடும்பங்களில் அனுமதிப் பெற்ற பிறகு மீண்டும் ஒரு தேதியில் கூட்டத்தைக் கூட்ட வேண்டும். இக்கூட்டத்தில் குழுவின் பெயர், ஊக்குநர் / பிரதிநிதி, வங்கி, சேமிப்புத் தொகை மற்றும் சேமிப்புக் கணக்கை இயக்கும் பொறுப்பாளர்கள் ஆகியவற்றை முடிவு செய்து அனைத்து உறுப்பினர்களும் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

பிறகு, தொண்டு நிறுவனம் அல்லது கூட்டமைப்பின் அலுவலர்களை அழைத்து ஒரு கூட்டம் நடத்த வேண்டும். அக்கூட்டத்தில் உறுப்பினர்கள் குழு பற்றி எடுத்த தீர்மானங்களை உறுதி செய்ய வேண்டும். மேலும் கிராமத்தின் அருகிலுள்ள வங்கியில் குழுவின் பெயரில் சேமிப்புக் கணக்கை தொண்டு நிறுவனம் அல்லது கூட்டமைப்பின் அறிமுகத்துடன் துவங்க வேண்டும். நாம் யாரையும் வற்புறுத்திக் குழுவில் சேர்க்கக் கூடாது. ஏனென்றால் சுய உதவிக்

குழு என்பது பதிவு செய்யப்படாத நிறுவனமாகும். எனவே, மிகுந்த கவனத்துடன் ஆரம்பித்தால் வெற்றி நிச்சயம்

சுயஉதவிக் குழுக் கூட்டங்களை எவ்வாறு வெற்றிகரமாக நடத்துவது?

ஒரு சுய உதவிக் குழு ஆரம்பித்தப் பிறகு மிக மிக முக்கிய மானது குழுக் கூட்டங்கள் நடத்துவது. சில இடங்களில் மாதக் கூட்டமும், சில இடங்களில் வாரக் கூட்டமும், ஒரு சில இடங்களில் மாதம் இரு கூட்டமும் நடைபெறுகின்றன. இவற்றில் வாரக் கூட்டம்தான் மிக சிறந்த செயல்முறை யாகும். ஏனென்றால் வாரக் கூட்டம் நடத்தும் போது குழுவின் சேமிப்பும், குழு உறுப்பினர்களின் சிந்தனையும் சம விகிதத்தில் வளர்ச்சியடைகிறது. சுய உதவிக் குழுக் கூட்டங்கள் குழுவின் சேமிப்பை வளர்க்கவும், திறமைகளை அதிகப்படுத்தவும், பிரச்சனைகளைத்

தீர்க்கவும் மிகவும் உதவுகிறது. ஆனால் இக்கூட்டங்களை முறைப்படி நடத்தினால் தான் மேற்கண்டவைகள் நமக்கு சாதகமாக இருக்கும். ஒரு குழுவில் ஒரு உறுப்பினர் தவறு செய்திருந்தால் நேரடியாக சுட்டிக்காட்டி அவமானப்படுத்தக் கூடாது. அதனை மறைமுகமாகச் சுட்டிக்காட்டி அந்த உறுப்பினரைத் திருத்த வேண்டும். இதனைப் பின்வரும் ஒரு நிகழ்வின் மூலம் நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

ஒரு நிறுவனத்தில் மாதந்தோறும் இயக்குனர்களுக்கான கூட்டம் நடந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு மாதமும் மேலாண்மை இயக்குனரைத் தவிர மற்ற இயக்குனர்கள் தாமதமாக வந்து கொண்டிருந்தனர். இதனை எவ்வாறு சரி செய்வது என்று மேலாண்மை இயக்குனர் தீவிரமாக சிந்தித்தார். எனவே, அடுத்த இயக்குனர்களுக்கான கூட்டத்தில் மேலாண்மை இயக்குனர் தாமதமாக வந்தார். வந்தவுடன் தன் உதவியாளரை ஒரு உண்டியல் கொண்டு வரச் செய்தார். அக்கூட்டத்தில் மற்ற இயக்குனர்களிடம் தான் பத்து நிமிடம் தாமதமாக வந்ததற்கு வருத்தம் தெரிவித்து, ஒரு நிமிடத்திற்கு ரூ. 10/– வீதம் 10 நிமிடத்திற்கு ரூ. 100/–ஐ உண்டியலில் செலுத்தினார். இதனை மற்ற இயக்குனர்கள் கூர்ந்து கவனித்து தங்களுடைய தவறை உணர்ந்து வருந்தினார்கள். அடுத்த முறை கூட்டத்திற்கு அனைத்து இயக்குனர்களும் சரியான நேரத்தில் வருகை தந்தனர். இதில் மேலாண்மை இயக்குனரின் சிறந்த தலைமைப் பண்பு தெளிவாக வெளிப்படுகிறது.

சுய உதவிக் குழு கூட்டம் நடத்துவதற்கு ஒரு நல்ல வசதியான, அமைதியான இடத்தை தேர்வு செய்து கொள்ள வேண்டும். கூட்டம் நடக்கும் தேதி மற்றும் நேரம் அனைத்து உறுப்பினர்களுக்கும் ஏற்றதாக இருக்குமாறு முடிவு செய்ய வேண்டும். கூட்டத்தில் பேச வேண்டிய கருத்துக்களை கூட்டம் நடப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்னரே முடிவு செய்ய வேண்டும்.

குழு உறுப்பினர்கள் அனைவரும் வட்டமாக அமர வேண்டும். அப்பொழுதுதான் ஒருவரையொருவர் நேருக்கு நேர் பார்த்து கருத்துக்களை தெளிவாக பரிமாறிக் கொள்ள முடியும்.

பெண்கள் 12 முதல் 20 நபர்கள் ஒன்று சேர்ந்து மகளிர் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனம் அல்லது கூட்டமைப்பை அணுகி சுய உதவிக் குழு அமைக்கும் விருப்பத்தை தெரிவிக்க வேண்டும்.

ஒரு சுய உதவிக் குழுவின் கூட்டம் சிறப்பாக அமைய பின்வரும் வழிமுறைகளைக் கையாள வேண்டும்.

1. ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமை தாங்கும் நபரை தேர்வு செய்ய வேண்டும்.
2. நிகழ்ச்சி நிரல் தயாரிக்க வேண்டும்.
3. நிகழ்ச்சி நிரல் மாதிரி படிவம் பின்வருமாறு
   - அ. இறை வணக்கம்
   - ஆ. உறுதிமொழி
   - இ. வருகை பதிவேடு
   - ஈ. முந்தைய கூட்டங்களின் தீர்மானங்களை ஆய்வு செய்தல்
   - உ. கடந்த கூட்டத்தின் வரவு – செலவுகளை ஆய்வு செய்தல்
   - ஊ. நடப்பு கூட்ட வரவு – செலவுகளை பதிவு செய்தல்
   - எ. தொழில் வாய்ப்புகள் (ம) சந்தைப்படுத்துதல் பற்றி ஆலோசித்தல்
   - ஏ. சமூக பொருளாதார மேம்பாடு பற்றி ஆலோசித்தல்
   - ஐ. முக்கிய பிரச்சனைகளுக்கு தெளிவான முடிவு எடுத்தல்
   - ஒ. முற்றம் இதழ் குறித்து விவாதித்தல்
   - ஓ. இதர விஷயங்கள்

மேற்கண்ட நிகழ்ச்சி நிரலை ஒவ்வொன்றாக கூட்டத்தில் எவ்வாறு ஆலோசித்து தீர்மானங்களை நிறைவேற்றுவது என்பதை அடுத்த இதழில் பார்ப்போம். (தொடரும்)

தஞ்சை மகளிர் குழுவின் வெற்றி

பட்டுக்கோட்டை வட்டம், கரம்பயம் கிராமத்தில் 2002ஆம் ஆண்டு முதல் பாரி விவேகானந்தா மகளிர் சுய உதவிக் குழு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்குழுவில் உள்ள 17 உறுப்பினர்களும் ஒற்றுமையுடன் செயல்பட்டு வருகின்றனர். இக்குழுவின் மூலம் கறவை மாடுகள் வாங்கப்பட்டு பால் பண்ணை ஒன்று துவங்கப்பட்டுள்ளது.

கடந்த கல்வி ஆண்டில் இக்குழுவினர் கிராமத்தில் உள்ள அரசு பள்ளியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு ஊக்கத் தொகையும், 31 ஏழைக் குழந்தைகளுக்கு இலவச சீருடையும் வழங்கினர். கிராமப்புறத்தில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்களுக்கு சட்டம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்களின் மூலம் சட்ட விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது. இதன் மூலம் பெருமளவு பெண்கள் சட்ட நுணுக்கங்கள் குறித்த விழிப்புணர்வு பெற்றுள்ளனர்.

மேலும் மருத்துவம், சுகாதாரம் போன்ற துறைகள் கிராமத்தில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு அளித்து வருகின்றனர். குழு சேமிப்புத் தொகை முழுமையாகப் பாதுகாக்கப்பட்டு, பயன் பெறும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

31 ஏழைக் குழந்தைகளுக்கு இலவச சீருடையும் வழங்கப்பட்டது. கிராமப்புறத்தில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்களுக்கு சட்டம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்களின் மூலம் சட்ட விழிப்புணர்வு நடத்தப்பட்டது.

காஞ்சிபுரம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி

காஞ்சிபுரம் மாவட்டம் பரனூரில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு துணை முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, ரூ. 140 கோடி மதிப்பிலான பல்வேறு திட்டங்களை துவக்கி வைத்து சிறப்பித்தார். விழா வில் 1506 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மானியத்துடன் கூடிய சுழல் நிதி மற்றும் பொருளாதாரக் கடனாக 10 கோடியே 55 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. விழாவில் மாண்புமிகு தமிழக துணை முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும் போது, "பெண்களின் முன்னேற்றத்திற்காக டாக்டர் கலைஞர் அவர்கள் சுய உதவிக் குழுக்களை ஏற்படுத்தினார். இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டாலும், தமிழகம்தான் முதலிடம் வகிக்கின்றது. மகளிர் சுய உதவிக் குழுக்கள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்துவதிலும் தமிழகம் தான் முதலிடம் வகிக்கின்றது. மகளிர் சுய உதவிக் குழுக்கள் தங்கள் செயல்பாட்டால் தமிழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளனர்" என்று குறிப்பிட்டார்.

சுயஉதவிக் குழுக்களில் சேருவோம்
உயர்வடைந்து தன்னிறைவு சேர்ப்போம்
– மாண்புமிகு. துணை முதல்வர்

தருமபுரி

இளம் பெண்களுக்கான உதவி செவிலியர் (நர்சிங்) இலவச திறன் பயிற்சி

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலமாக தருமபுரி மாவட்ட மகளிர் திட்டத்தின் மூலம் "இளைஞர் தொழிற்திறன் பயிற்சி 2009–10" திட்டத்தின் கீழ் 18 வயது முதல் 25 வயது வரையிலுள்ள திருமணமான, திருமணம் ஆகாத மற்றும் கைம்பெண்களுக்கும், மேற்படிப்பினை தொடர இயலாமல் வறுமை நிலையில் உள்ள குடும்பங்களைச் சார்ந்த இளம் பெண்களுக்கும் உதவி செவிலியர் பயிற்சி வழங்கப்படுகிறது. 6 மாத காலம் இலவசமாக வழங்கப்படும் இப்பயிற்சிக்கு பயனாளர்களை தேர்வு செய்வதற்கான நேர்காணல் தருமபுரியில் நடைபெற்றது. 10ஆம் வகுப்பு தேர்ச்சி அல்லது 12ஆம் வகுப்பில் அறிவியல் பிரிவில் பயின்ற இளம் பெண்கள் தேர்வு செய்யப்பட்டனர். இந்த நேர்காணலில் சுமார் 427 இளம் பெண்கள் கலந்து கொண்டனர்.

"வறுமை நிலையில் உள்ள குடும்பங்களைச் சார்ந்த இளம் பெண்களுக்கு உதவி செவிலியர் பயிற்சி வழங்கப்படுகிறது. 6 மாத காலம் இலவசமாக வழங்கப்படும் இப்பயிற்சிக்கு பயனாளர்களை தேர்வு செய்வதற்கான நேர்காணல் தருமபுரியில் நடைபெற்றது."

கடலூர்

ஆடைகளில் வண்ணக் கோலம்

மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலின் கீழ் துணிகளில் அழகிய பூ வேலைப் பாடுகள் செய்வது குறித்த பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்களை சேர்ந்த 25 நபர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், சில்வர் பீச் அருகேயுள்ள தேவனாம்பட்டினத்தில் கடந்த 5 வருடங்களாக செயல்பட்டு வரும் ஸ்ரீ சாரதாதேவி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்களும் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

இப்பயிற்சியின் மூலம் புடவை, சுடிதார் என பல துணிகளிலும் பல விதமான தோற்றத்துடன்கூடிய பூவேலைப்பாடுகள் மிகவும் சிறப்பான முறையில் செய்வது பற்றி அறிந்து கொண்டதுடன், நிறம் தேர்வு, தரம் நிர்ணயிப்பது, தரமான முறையில் வேலை முடிப்பது போன்றவற்றை ஆர்வமாகவும், தெளிவாகவும் கற்றுக் கொண்டனர்.

ரூ. 150 முதல் ரூ. 200 மதிக்கத்தக்க ஒரு புதிய புடவையில் மிகவும் தரமான முறையில் பூ வேலைப்பாடுகளை செய்து, அதனை குறைந்தது ரூ. 500 முதல் ரூ. 800 வரை விற்பனை செய்யலாம். 5 நபர்கள் இணைந்து வாரம் ஒன்றிற்கு 4 அல்லது 5 புடவைகள் வரை தைக்க முடிகின்றது. "இன்றைய காலகட்டத்தில் பெண்களின் விருப்பத்திற்கு ஏற்றார்போல புடவைகளில் அழகிய தோற்றத்தில் பூ வேலைப்பாடுகளை செய்து கொடுப்பதால் தங்களுக்கு நல்ல வருமானத்துடன் கூடிய வாழ்க்கைத் தரமும், தன்னம்பிக்கையும் ஏற்பட்டிருப்பதாகவும், இவ்வாய்ப்பை எங் களுக்கு அளித்த மகளிர் திட்டத்திற்கு மன மார்ந்த நன்றி" எனவும் ஸ்ரீ சாரதாதேவி மகளிர் சுய உதவிக் குழுவின் தலைவி உதயா கூறுகிறார்.

தங்களுக்கு நல்ல வருமானத்துடன் கூடிய வாழ்க்கைத் தரமும், தன்னம்பிக்கையும் ஏற்பட்டிருப்பதாகவும், இவ்வாய்ப்பை எங்களுக்கு அளித்த மகளிர் திட்டத்திற்கு மனமார்ந்த நன்றி"

நாமக்கல் சமுதாயப் பயிற்றுனர் பயிற்சி

மகளிர் திட்டத்தின் மூலம் சமுதாய பயிற்றுனர் பயிற்சி கொல்லிமலை இளைஞர் விடுதியில் இரண்டு கட்டங்களாக நடைபெற்றது. பயிற்சியில் அறுபது நபர்கள் கலந்து கொண்டனர். மாவட்ட அளவிலான முதன்மை பயிற்றுனர்களான திரு. சிவக்குமார், திரு. ரஷ்யா, திருமதி. டி. விஜயா மற்றும் திருமதி. நவநீதம் ஆகியோர் பயிற்சிகளை நடத்தினர். இப்பயிற்சியினை மகளிர் திட்ட அலுவலர் திருமதி. ஜி. கே. லோகேஷ்வரி அவர்கள் துவக்கி வைத்து பேசும் போது, பயிற்றுனர்கள் கூறும் அனைத்து தகவல்களையும் முழுமையாக பெற்று சுய உதவிக் குழுவிற்கு சென்றடையும் வகையில் தகவல்களை கொண்டு சேர்க்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்கள்.

பயிற்சியில் மகளிர் திட்டத்தின் நோக்கம், நிறுவன அமைப்பு, சுய உதவிக் குழு அமைக்கும் விதிமுறைகள், குழுக்களின் செயல்பாடுகள், குழு தர மதிப்பீட்டின் அவசியம், பதிவேடு பராமரித்தல், தணிக்கையின் அவசியம், வங்கிகளின் மூலம் சுய உதவிக் குழுவிற்கு வழங்கப்படும் கடன்கள் பற்றியும் மற்றும் திட்டங்கள் பற்றியும் விளக்கப்பட்டது. மேலும் அரசியல் மேம்பாடு, பொருளாதார மேம்பாடு மற்றும் திறன் வளர்த்தல் பற்றியும் விளக்கப்பட்டது. சுய உதவிக் குழுக்கள் எந்த துறையுடன் இணைந்து செயல்படலாம் என்பதனை விளக்கப் படங்கள் மூலம் விளக்கப்பட்டது. மேலும் பயிற்சியின் போது உதவி திட்ட அலுவலர் செல்வி. ஆ. திலகவதி அவர்கள் உடன் இருந்தார். பயிற்சி பெற்ற பயிற்றுனர்களுக்கு திட்ட அலுவலர் அவர்கள் பயிற்சி நிறைவு நாளன்று சான்றிதழ்கள் வழங்கினார்.

> மகளிர் திட்டத்தின் நோக்கம், நிறுவன அமைப்பு, சுய உதவிக் குழு அமைக்கும் விதிமுறைகள், குழுக்களின் செயல்பாடுகள், குழு தர மதிப்பீட்டின் அவசியம், பதிவேடு பராமரித்தல், தணிக்கையின் அவசியம், வங்கிகளின் மூலம் சுய உதவிக் குழுவிற்கு வழங்கப்படும் கடன்கள் பற்றியும் மற்றும் திட்டங்கள் பற்றியும் விளக்கப்பட்டது.

கரூர் சுய உதவிக் குழுக்களுக்கு பாராட்டு

கரூர் மாவட்டத்தில் நடைபெற்ற மாரியம்மன் திருவிழாவினை முன்னிட்டு மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி, வேலு உதவி பெறும் துவக்கப்பள்ளியில் நடைபெற்றது. இதில் 11 சுய உதவிக் குழுக்கள் தங்களின் விற்பனை அரங்குகளை அமைத்திருந்தன.

இக்கண்காட்சியில் கைவினைப் பொருட்கள், பட்டுக்கூடில் தயாரிக்கப்பட்ட பூ மாலைகள், சத்து மாவு, மூலிகைப் பொருட்கள், வத்தல், வடகம், ஊறுகாய், கைத்தறி மிதியடிகள், ஆயத்த ஆடைகள், நவீனவகை ஆபரணங்கள் போன்றவை அதிக அளவில் விற்பனை ஆனது.

சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் என்பதால் பொதுமக்கள் விரும்பி வாங்கிச் சென்றதுடன், விற்பனை அரங்குகளை அமைத்திருந்த சுய உதவிக் குழுப் பெண்களை பாராட்டிச் சென்றது அவர்களை ஊக்குவிப்பதாக அமைந்திருந்தது.

> “கைவினைப் பொருட்கள், பட்டுக்கூடில் தயாரிக்கப்பட்ட பூ மாலைகள், சத்து மாவு, மூலிகைப் பொருட்கள், வத்தல், வடகம், ஊறுகாய், கைத்தறி மிதியடிகள், ஆயத்த ஆடைகள், நவீனவகை ஆபரணங்கள் போன்றவை அதிக அளவில் விற்பனை ஆனது.”

மகத்தான குழுவாய் நம்மை மாற்றிடுவோம்
மணிமேகலை விருதை இலக்காய் போற்றிடுவோம்
– மாண்புமிகு. துணை முதல்வர்



நாமக்கல்

இராமாபுரம் கூட்டமைப்பு

மல்லசமுத்திரம் ஒன்றியம், இராமாபுரம் ஊராட்சியில் இராமபுரம் பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பு செயல்பட்டு வருகிறது. இக்கூட்டமைப்பு மகளிர்திட்டம் மூலம் மறுசீரமைக்கப்பட்டு கூட்டுறவு சட்டம் 1975ன்படி பதிவு செய்யப்பட்டு மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இராமாபுரம் பஞ்சாயத்தில் உள்ள 15 குக்கிராமங்களில் செயல்பட்டு வரும் 25 சுய உதவிக் குழுக்களும் தர மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. அதில் 11 சுய உதவிக் குழுக்கள் செயல்படும் பகுதி முழுவதும் விவசாயம் நிறைந்த பகுதி என்பதால், அக்குழுக்களுக்கு கறவைமாடுகள் வாங்கி வளர்ப்பதற்காக பொருளாதாரக் கடன் பெற்றுத் தரப்பட்டுள்ளது.

இப்பகுதியில் உள்ள அனைத்து குழந்தைகளையும் பள்ளிக்கு அனுப்ப ஊக்குவிக்கும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தினம், சுதந்திர தினம் போன்ற நாட்களில் பள்ளிக் குழந்தைகளுக்கு பாடப் புத்தகங்கள் மற்றும் சீருடைகள் வழங்கி வருகின்றனர். மருத்து வரை அணுகி தேவையான ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகள் பெற்றிட கர்ப்பிணிப் பெண்களுக்கு அறிவுரைகளை வழங்கி வருகின்றனர்.

மேலும் தங்கள் பகுதியில் விவசாயத்தை தவிர வேறு எந்த தொழிலும் மேற்கொள்ள இயலாததால் தங்களின் கூட்டமைப்பில் உள்ள பெண்களுக்கு மகளிர் திட்டம் மூலம் பெண்களுக்கான தொழிற்பயிற்சி திட்டத்தின் கீழ் தையல் பயிற்சி பெற்றுள்ளனர். பயிற்சி முடிந்த பிறகு மகளிர் சுய உதவிக் குழு கட்டிடத்தை அலுவலகமாகக் கொண்டு இக்கூட்டமைப்பினர் வங்கிக் கடன் பெற்று ஆயத்த ஆடை தயாரிக்கும் தொழிலை கூட்டமைப்பு மூலம் செயல்படுத்தி வருகின்றனர்.

> 15 குக்கிராமங்களில் செயல்பட்டு வரும் 25 சுய உதவிக் குழுக்களும் தர மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. அதில் 11 சுய உதவிக் குழுக்கள் செயல்படும் பகுதி முழுவதும் விவசாயம் நிறைந்த பகுதி என்பதால், அக்குழுக்களுக்கு கறவை மாடுகள் வாங்கி வளர்ப்பதற்காக பொருளாதாரக் கடன் பெற்றுத் தரப்பட்டுள்ளது.

> குடியரசு தினம், சுதந்திர தினம் போன்ற நாட்களில் பள்ளிக் குழந்தைகளுக்கு பாடப் புத்தகங்கள் மற்றும் சீருடைகள் வழங்கி வருகின்றனர்.

2007 – 2008ஆம் ஆண்டிற்கான சிறந்த பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பிற்கான மாவட்ட அளவிலான மணிமேகலை விருதினை இக்கூட்டமைப்பு பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

வெற்றி பெற்ற இளைஞன்

கோவை மாவட்டம், காரமடை, சின்ன தொட்டி பாளையத்தைச் சேர்ந்த திரு. முருகன் அவர்களின் மகன் திரு. எம். ரங்கநாதன் (வயது 20) என்பவர் 9ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்ற கேள்விக்குறியோடு இருந்த ரங்கநாதன் தனது நண்பர் ஒருவர் மூலம் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், இளைஞர்களுக்கு குறுகிய கால திறன் பயிற்சி அளித்து வரும் விபரத்தினை அறிந்து கொண்டார்.

பின்னர் எலக்ட்ரீசியன் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பான முறையில் பயிற்சி பெற்றார். தற்போது காரமடை செட்டிப்பாளையத்தில் செயல்பட்டு வரும் எலக்ட்ரிகல் நிறுவனம் ஒன்றில் எலக்ட்ரீசியனாக மாதம் ரூ. 4,000/– (ரூபாய் நான்காயிரம் மட்டும்) ஊதியத்தில் பணி புரிகிறார். தனது குடும்பத்திற்கு உறுதுணையாகவும், பொறுப்பாகவும் செயல்படுவதற்கு இவர் பெற்ற இலவச பயிற்சிதான் முக்கிய காரணம்.

மிகக் குறைந்த வருவாயில் குடும்பத்தை நடத்தி வந்த ரங்கநாதனின் வருமானம் உயர்ந்ததோடு, குடும்ப உறுப்பினர்கள் மகிழ்ச்சியோடு இருப்பதற்கு ரங்கநாதனுக்கு பயிற்சி அளித்த நிறுவனம் மற்றும் மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் உதவி ஆகியவை தான் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

நடன. காசிநாதன், எம்.ஏ.,
மேனாள் இயக்குனர், தொல்லியல் துறை

பழங்காலப் பெண்டிர் நிலை

எந்தவொரு சமுதாயமும், அது மிகவும் நாகரீகமுற்ற சமுதாயமா அல்லது நாகரீகத்திலே பின்னடைந்த சமுதாயமா என்பதை அச்சமுதாயத்தில் முக்கியமானதொரு பங்கை வகிக்கும் பெண்களின் நிலையை வைத்தே கணக்கிட முடியும். இந்தியாவில் மிகச் சிறந்ததொரு நாகரீகமாக விளங்கிய ஹரப்பன் நாகரீகத்தில் பெண் தெய்வம், சிறப்பானதொரு இடத்தைப் பெற்றிருந்திருக்கிறது.

வேதகால நாகரீகத்தில் பெண்களின் நிலை பிற்பட்ட நிலையிலேயே இருந்தது என்பதை நாம் அறியும் போது அதை மற்ற நாகரீகங்களின் நிலைக்குக் கொண்டு செல்ல முடியவில்லை. பெண்கள் வேதங்களைப் பயிலக் கூடாதென்றும், பொதுச் செயல்களில் பங்கேற்கக் கூடாதென்றும் வேத நூல்களில் வரையறுக்கப்பட்டுள்ள கருத்துக்கள் மனிதகுல நாகரீகத்திற்கு முட்டுக் கட்டையாகவே இருக்கின்றன.

ஆனால் பிற்கால நாகரீகங்களைப் பார்க்கையில் பெண்களுக்கு நல்ல முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, சிறப்பானதொரு இடத்தை வகித்து வந்திருக்கின்றனர் என்பது புரிகிறது. குறிப்பாக தமிழகத்தில் நிலவிய சங்ககால நாகரீகத்தை எடுத்துக் கொள்வோமாயின் பெண்கள் சீரிய நிலையில் வைக்கப்பட்டிருந்தனர் என்பதும், அவர்கள் அரசியல் சமுதாயத்தில் பெரும் பொறுப்பேற்றிருந்தனர் என்பதும் தெரிய வருகின்றன. அஞ்சியத்தை மகள் நாகையார், ஒக்கூர் மாசாத்தியார், ஔவையார், காக்கைப் பாடினியார், நச்செள்ளையார், குறமகள் இளவெயினி, குறமகள் குறிஎயினி, தாயங்கண்ணியார் போன்ற பெண்பாற் புலவர்கள் சங்க காலத்தில் இருந்து தமிழ்ப் பாக்களை யாத்துத் தந்தது, அக்காலத்தில் நாகரீகச் சிறப்புக்கு வலிமையூட்டுவதாக அமைந்துள்ளது.

தமிழகத்தில் நிலவிய சங்ககால நாகரீகத்தை எடுத்துக் கொள்வோமாயின் பெண்கள் சீரிய நிலையில் வைக்கப்பட்டிருந்தனர் என்பதும், அவர்கள் அரசியல் சமுதாயத்தில் பெரும் பொறுப்பேற்றிருந்தனர் என்பதும் தெரிய வருகின்றன.

சிலப்பதிகாரம், மாதவி ஆடற்கலையில் சிறந்து விளங்கி தலைக்கோலி என்ற பட்டம் பெற்றவள் என்று சிறப்பித்துரைக்கிறது. ஔவையார் போன்ற புலவர்கள் மன்னர்களுக்குள் தூது சென்று வரவிருந்த போரை தவிர்த்தார்கள் என்று நாம் அறியும் போது அவர்கள் அரசியல் துறையிலும் பெரும் தொண்டாற்றியுள்ளார்கள் என்று உணர முடிகிறது. கண்ணகியின் காவியத்தைப் படிக்கும் போது குற்றம் கொற்றவனே புரிந்தாலும் தனியொருத்தியாக ஒரு பெண் சென்று, அரசவையிலே நீதி கேட்கலாம், மன்னன் தவறிழைத்திருந்தால் அங்கேயே மன்னனையே எதிர்த்து வாதாடலாம் என்ற உரிமை பெண்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்ததை நாம் காண முடிகிறது. அதோடு அல்லாமல் ஒரு ஊருக்கு பெரும் அபாயம் என்று வரும்போது பத்தினிப் பெண்களையும், குழந்தைகளை கொண்டுள்ள பெண் களையும் மக்கள் மிகவும் பாதுகாத்தனர் என்று அறிய முடிகிறது.

சாதவாகன மன்னர்கள் தங்களது பெயர்களுக்கு முன்னால் தங்கள் தாய்மார்களுடைய பெயர்களைச் சேர்த்துக் கொண்டார்கள் என்றும் காணும்போது பிற்காலத்தில் பெண்கள் போற்றப்பட்டிருந்தனர் என்பது உணர முடிகிறது. அதேபோன்று குப்தர் கால நாகரீகத்திலும் பெண்களுக்கு மிக உயர்ந்த இடம் அளித்திருக்கின்றனர். குப்தப் பேரரசன் சந்திரகுப்தன் தான் வெளியிட்ட நாணயத்தில் தன்னுடைய பட்டத்தரசியின் உருவத்தைப் பொறித்து வெளியிட்டான்

என்று அறியும்போது பெண்கள் மிக உன்னத நிலையில் வைக்கப்பட்டிருந்தார்கள் என்று உணர முடிகிறது. இஷ்வாகு குலத்துப் பட்டத்தரசிகள் பலர், நாகார்ஜுன கொண்டாவில் ஏற்பட்ட புத்த ஸ்தாபாவுக்குப் பலவிதக் கொடைகள் அளித்துள்ளமையும் குறிக்கப் பட்டுள்ளது.

தமிழகத்தை ஆண்ட பல்லவர் காலத்துக்கு வருவோ மாயின் அப்பொழுதும் பெண்களின் நிலை மிக நல்ல நிலையில் இருந்திருக்கிறது. சாருதேவி என்ற பல்லவ அரசி, தன் இளங்குழந்தைக்குப் பாதுகாப்பாக அரசு புரிந்திருக்கிறாள் என்பதை அறியும் போது, அரசாள்வதற்குச் சரியான, முறையான ஆண்மகன் இல்லாதபோது பெண் மக்களும் அரசாளலாம் என்ற நியதி இருந்தமை புரிகிறது. இரண்டாம் நரசிம்மனின் மனைவி ரங்கபாதகை பல கொடைகள் அளித்துள்ளதாக கல்வெட்டுகள் மூலமாக அறிய முடிகிறது.

முதலாம் மகேந்திரவர்மனின் சம காலத்தவராகிய அப்பர் பெருமானின் தமக்கையார் திலகவதியார் சைவப்பற்று மிகுந்தவர் என்றும், தனது தம்பியைச் சமண மதத்தி னின்றும் சைவச் சமயத்துக்கு மாற்றியவர் என்றும் நாம் உணரும்போது பெண்கள் அறிவுரை கூறும் நிலையில் இருந்திருக்கின்றனர் என்று நாம் எளிதில் அறிந்து கொள்ளலாம்.

சோழர் காலத்தில் பெண்டிர் நிலையைக் காண்போமா யின், மேற்குறிப்பிட்ட எல்லாக் காலத்தை விட இக்காலத்தில் பெண்கள் பல திறத்திலும் முன்னேற்றம் அடைந்திருக்கின்றனர் என்பது உணர முடிகிறது. சோழ மன்னர்களிலேயே மிகச் சைவப்பற்று கொண்டிருந்த, திருவிசைப்பா பாடிப் புகழ் பெற்ற கண்டாராதித்தன் என்ற மன்ன னின் பட்டத்தரசி செம்பியன் மாதேவி என்பாள் சைவப்பற்றில் தன் கணவனையும் மிஞ்சும் அளவில் இருந்திருக்கிறாள். அவள் தனது பெருமுயற்சியால் பல கோயில்களைக் கட்டுவித்தும், அவைகளுக்குப் பொன்னும் மணியும், நிலமும் கொடையளித்துச் சிறப்புச் செய்திருக்கிறாள்.

விழுப்புரம் மாவட்டத்தில் திருவக்கரை என்ற ஊரில் காணப்படும் கோயில் அவ்வம்மையாரால் எழுப்பப்பட்ட கோவிலாகும். தஞ்சை மாவட்டத்திலே இன்றும் உள்ள செம்பியன் மாதேவி என்னும் ஊரில் உள்ள கோயிலில் இவ்வம்மையாரின் உருவச்சிலை வழிபாட்டிலிருந்ததாகக் கூறப்படுகிறது. சோழப் பேரரசன் இவ்வம்மையாரிடம் மிகுந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தான் என்பதையும், இவ்வம்மையாரின் நினைவாகத் திருமுக்கூடலில் செம்பியன் மாதேவி மண்டபம் என்ற ஒரு மண்டபத்தை ஏற்படுத்தினான் என்பதையும் நாம் அறிகிறோம்.

அடுத்தச் சிறப்பு நிலையில் விளங்கியவர் வல்லவரையன் வந்தி யத் தேவன் மனைவியும், முதலாம் இராசராசன் தமக்கையு மான குந்தவைப் பிராட்டியாராவார். இராசராசன் தனது தமக்கையிடம் அளவு கடந்த மரியாதைக் காட்டியிருக்கிறான். தஞ்சைப் பெருவுடையாருக்குத் தங்கள் குடும்பத்தினர் கொடை அளித்ததைக் குறிக்கும் விதத்தில் கோயிலின் சுவர்களில் கல்வெட்டு பொறிக்கும் பொழுது தன்னுடைய கொடையைக் குறிப்பது முதலாவதாகவும், அடுத்துத் தமது தமக்கை அளித்த கொடையைக் குறிப்பதும் பொறிக்கப்பட்டிருப்பது, அவன் குந்தவைப் பிராட்டியாரிடம் கொண்டிருந்த மரியாதை எவ்வளவு சிறப்பான தன்மையுடையது என்பது தெரிகிறது. அதற்கு அடுத்தாற் போன்றுதான் தனது பட்டத்தரசிகள் அளித்த கொடையைப் பற்றிக் குறிக்கிறான்.

குந்தவை பல கோயில்களை எடுப்பித்தும், அவைகளுக்குப் பல கொடைகள் அளித்தும் சிறப்புச் செய்திருக்கிறாள். சமய வேற்றுமைக் கருதாது சைவ, சமண, பௌத்த கோயில்களுக்குக் கொடை அளித்திருப்பது அக்காலப் பெண்டிரின் சமயப் பொறையைத் தெற்றென விளக்குகிறது. ஆதுர சாலை (மருத்துவச் சாலை) அமைத்தும் பிணி நீக்கும் பெருந்தொண்டு புரிந்திருக்கிறாள்.

சமுதாயத்தில் மிக உயர்ந்த நிலையிலிருந்த அரச குடும்பத்துப் பெண்கள் சிறப்பான நிலையில் இருந்தனர் என்று இல்லாது, எல்லாத் தரப்பட்ட பெண்களுமே சோழர் காலத்தில் நல்ல நிலையில் இருந்திருக்கின்றனர். இக்காலத்தில் பெண்மணிகள் சிலர் உயர்ந்த அதிகாரிச்சிகளாக இருந்திருக்கின்றனர். முதலாம் இராசராசன் காலத்தில் குஞ்சரமல்லி என்ற ஒரு அதிகாரிச்சி இருந்திருக்கிறாள். அவளுடைய மேற்பார்வையில் அரசனின் பட்டத்தரசி ஓலோக மாதேவியார் அளித்த கொடை கல்லிலே பொறிக்கப்பட்டது என்பது தெரிய வருகிறது.

முதலாம் இராஜராஜன் காலத்தில் சோமயன் அமித்திரவல்லி என்ற ஒரு அதிகாரிச்சி இருந்ததும் கல்வெட்டுகளின் மூலம் நமக்குத் தெரிய வருகின்றது. இரண்டாம் இராசேந்திரனின் காலத்தில் முத்தார் பொன்நங்கை என்ற ஒரு அதிகாரிச்சி இருந்ததும் கல்வெட்டுகளின் மூலம் நமக்குத் தெரிய வருகின்றது. சோழர்கள் காலத்தில் பெண்கள் பொது நிர்வாகங்களையும் திறம்பட நிர்வகித்திருக்கிறார்கள் என்பது மற்றொரு கல்வெட்டு மூலம் நமக்குத் தெரிய வருகிறது.

“சோழப் பேரரசன் இவ்வம்மையாரிடம் மிகுந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தான் என்பதையும், இவ்வம்மையாரின் நினைவாகத் திருமுக்கூடலில் செம்பியன் மாதேவி மண்டபம் என்ற ஒரு மண்டபத்தை ஏற்படுத்தினான் என்பதையும் நாம் அறிகிறோம்.”

ஒரு கோடி ஏழைக் குடும்பங்களுக்கு
உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான

கலைஞர் காப்பீட்டுத் திட்டம்

இந்திய வரலாற்றிலேயே இதுவரையில் எந்த மாநிலத்திலும் செய்யப்படாத அரிய திட்டமும், அற்புத திட்டமுமான ஒரு கோடி ஏழை குடும்பங்களுக்கு உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான 'கலைஞர் காப்பீட்டுத் திட்டம்' தமிழகத்தில் முதல்வர் கலைஞர் அவர்களின் சிந்தனையில் உதித்த அற்புதமான திட்டமாகும்.

2009-2010ஆம் ஆண்டுக்கான நிதி திலை அறிக்கையில், ஏழை எளிய சாமானிய மக்கள், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில், உயிருக்கு ஆபத்தான 51 நோய்களுக்கு, ஒரு இலட்சம் ரூபாய் வரையில், இலவச உயர் சிகிச்சை பெற வகை செய்யும் 'உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்' அறிவிக்கப்பட்டது.

விவசாயத் தொழிலாளர், மீனவர், கட்டுமானத் தொழிலாளர், சீர்மரபினர், பழங்குடியினர், ஆட்டோரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர், பனைமரத் தொழிலாளர், காலணித் தொழிலாளர், ஊனமுற்றோர், அரவாணிகள், முடிதிருத்துவோர், தையல் தொழிலாளர், ஓவியர் உள்ளிட்ட அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் உறுப்பினர்களாக உள்ளோரின் குடும்பங்கள் மற்றும் ஆண்டு வருமானம் 72 ஆயிரம் ரூபாய்க்கும் குறைவாக உள்ள ஏழைக் குடும்பங்கள் அனைத்தும் இத்திட்டத்தின் மூலமாகப் பயன் பெறலாம்.

காப்பீட்டு நிறுவனம் ஒவ்வொரு குடும்பத்திற்கும், குடும்ப உறுப்பினர்களின் நிழற்படம் அடங்கிய அடையாள அட்டையை வழங்கும். அந்த அடையாள அட்டையைக் காண்பித்து, அரசு மருத்துவமனைகள் தவிர, ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது 6 தனியார் மருத்துவமனைகளில் இத்திட்டத்தின் கீழ் ஏழைக் குடும்பங்கள் உயர் சிகிச்சைகள் பெற்றுக் கொள்ளலாம்.

குடும்ப உறுப்பினர்களின் நிழற்படம் அடங்கிய அடையாள அட்டையை வழங்கும். அந்த அடையாள அட்டையைக் காண்பித்து, அரசு மருத்துவமனைகள் தவிர, ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது 6 தனியார் மருத்துவமனைகளில் இத்திட்டத்தின் கீழ் ஏழைக் குடும்பங்கள் உயர் சிகிச்சைகள் பெற்றுக் கொள்ளலாம்.

இதயநோய், சிறுநீரகநோய், இரைப்பை-குடல்நோய்கள், மூளை-நரம்புமண்டலம்தொடர்பான நோய்கள் உட்பட 51 வகை நோய்களுக்கு இந்த இலவச காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் பயனாளிகள்



உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம் கைகொடுத்தது 15 வயது சிறுமிக்கு மூளையில் இருந்த கட்டி அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டது

இந்திய வரலாற்றிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அரிய திட்டம் – இந்தியாவுக்கே வழிகாட்டும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் அற்புதத் திட்டம் – "உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்" ஆகும். இத்திட்டத்தின் மூலம் உயிருக்கு ஆபத்தான 51 நோய்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வரையில் இலவச உயர் சிகிச்சை பெற வழிவகை செய்வதாகும்.

இத்திட்டம் தொடங்கிய ஒரு வாரத்திற்குள் இரண்டு பெரும் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. காரம்பாக்கத்தை சேர்ந்த இராமசாமி என்ற ஏழை வாகன ஓட்டுனருக்கு, சமீபத்தில் நடைபெற்ற விபத்தில் இடுப்புப் பகுதியில் எலும்பு முறிவு ஏற்பட்டது. பெரும்பாக்கம் குளோபல் மருத்துவமனையில் இராமசாமி அனுமதிக்கப்பட்டு, 'உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்' மூலம் இடுப்பு மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு நலம் பெற்றார்.

சென்னை செங்குன்றத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளியான பாபு என்பவரின் மகளான 15 வயது சிறுமி லதாவுக்கு இடது பக்க பெரு மூளையில் ஏற்பட்ட இரண்டு சென்டிமீட்டர் அளவுள்ள கட்டியால், கண் வீங்கியதுடன், கண் பார்வையும் பாதிக்கப்பட்டது. இக்கட்டியை அகற்ற வழியில்லாமல் அவதிப்பட்ட இச்சிறுமியின் குடும்பத்தாருக்கு, கலைஞர் காப்பீட்டுத் திட்டம் கைகொடுத்து உதவியுள்ளது. பெருங்குடியில் உள்ள லைஃப்லைன் என்ற தனியார் மருத்துவமனையில் சிறுமி லதாவுக்கு அறுவை சிகிச்சை மூலம் நோய்க்கட்டி வெற்றிகரமாக அகற்றப்பட்டுள்ளது.

"உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்' என்ற மகத்தான திட்டத்தின் மூலம் சிகிச்சை மேற்கொண்டு நோய் நீங்கி நலம் பெற்றார்."

"உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்" ஆகும். இத்திட்டத்தின் மூலம் உயிருக்கு ஆபத்தான 51 நோய்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வரையில் இலவச உயர் சிகிச்சை பெற வழிவகை செய்வதாகும்.

மருத்துவமனைகளில் சிகிச்சை பெற முடியும். இந்த இலவச காப்பீட்டுத் திட்டத்தின்படி, ஒரு குடும்பத்துக்கு காப்பீட்டிற்கான தவணை தொகை ரூ. 500/– என்ற அடிப் படையில் ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு பிரிமீயம் தொகையாக ரூ. 517 கோடியை தமிழக அரசு செலுத்துகிறது.

சிகிச்சை அளிக்கும் மருத்துவமனைகள் பட்டியலில் பெரிய நகரங்களில் 15 மருத்துவமனைகளும், ஒவ்வொரு மாவட்டத் திலும் 6 மருத்துவமனைகளும் இடம் பெறுகின்றன.

பயனீட்டாளர்களுக்கு சிறப்பு அடையாள அட்டை வழங்கப் படும். ரூ. 1 இலட்சம் வரையிலான மருத்துவச் செலவுகளை பயனீட்டாளர்கள் செலுத்தத் தேவையில்லை.

இந்த இலவச காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் பயனாளிகள் ஒவ்வொரு நான்கு ஆண்டுகளுக்குள் பலன் அடையலாம். ஒரு குடும்பத்துக்கு நான்கு பேர் என்ற அடிப்படையில் மொத்தம் 4 கோடி பேர் பலன் அடைவார்கள்.

மாண்புமிகு தமிழக துணை முதல்வர் திரு. மு. க.ஸ்டாலின் அவர்களுக்கு அண்ணா பல்கலைக் கழகம் சார்பில் டாக்டர் பட்டம்

தமிழக ஆளுநர் மேதகு சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் வழங்கினார்கள்

சலியாத உழைப்பும், விடாமுயற்சி, அர்ப்பணிப்பு உணர்வு, ஏழை எளியோரிடம் காட்டும் பரிவு, எளிமையான அணுகுமுறையால் அனைத்துத் தரப்பினரையும் ஈர்த்து, அரசியல் களத்தில் படிப்படியாக உயர்ந்து – ஆட்சிக் கலையில் அற்புத சாதனைகள் பல நிகழ்த்தி – தன்னேரில்லா தகைசால் துணை முதலமைச்சராகத் திகழும் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களுக்கு சென்னை அண்ணா பல்கலைக் கழகம் சார்பில் டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

அய்யா பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் சமூக சீர்திருத்தக் கொள்கைகளைப் பரப்பி வரும் 'அய்யாதுரையான' திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, ஊரக மற்றும் உள்ளாட்சித் துறையில் மக்கள் சேவைகளைப் பாராட்டியும், இளைஞர் சக்தியை ஒருங்கிணைத்து திறமைமிகு அரசியல் பணியாற்றி வருவதற்காகவும், சிங்கார சென்னையை உருவாக்கியதற்காகவும், சென்னை அண்ணா பல்கலைக் கழகம் சார்பில் டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது. சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா அரங்கில் 01.08.2008 அன்று நடைபெற்ற விழாவில் மாண்புமிகு தமிழக துணை முதல்வர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களுக்கு மேதகு தமிழக ஆளுநரும், அண்ணாப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தருமான திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் டாக்டர் பட்டம் வழங்கினார்கள்.

"சலியாத உழைப்பும், விடாமுயற்சி, அர்ப்பணிப்பு உணர்வு, ஏழை எளியோரிடம் காட்டும் பரிவு, எளிமையான அணுகுமுறையால் அனைத்துத் தரப்பினரையும் ஈர்த்து, அரசியல் களத்தில் படிப்படியாக உயர்ந்து...

உள்ளாட்சி அளவிலான கூட்டமைப்புகள்

சுய உதவிக் குழு இயக்கமானது இன்று மிகப்பெரும் வளர்ச்சி பெற்ற அமைப்பாக உள்ளது. எனினும் தனி மரம் தோப்பாகாது என்ற வார்த்தைகளுக்கு ஏற்றாற்போல் கிராமத்தில் இருக்கும் அனைத்து சுய உதவிக் குழுக்களையும் ஒன்றாக இணைத்து, உறுப்பினர்கள் சமூக பொருளாதார முன்னேற்றம் பெற்றிட அமைக்கப்பட்ட அமைப்பே கூட்டமைப்பு ஆகும். எனவே கூட்டமைப்பு குறித்த விபரங்களை அனைத்து சுய உதவிக் குழுவினரும் அறிந்து கொள்ள ஏதுவாக இத்தொடர் வெளியிடப்படுகிறது.

இத்தொடரில் கூட்டமைப்பின் தன்மை, அமைப்பு முறை, நிர்வாகிகள் தேர்வு, கூட்டமைப்பின் எல்லை போன்ற பல்வேறு விபரங்கள் எளிய நடையில் இடம் பெற்றுள்ளது. சுய உதவிக் குழுக்களுக்கு இத்தொடர் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றால் மிகையில்லை.

கூட்டங்கள்

"ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாகக் கூடி, ஒட்டுமொத்த மேம்பாட்டிற்காக பயன்தரக்கூடிய தகவல்களைப் பரிமாறி ஒரு முடிவிற்கு வரும் செயல்பாடே கூட்டமாகும்". கூட்டமைப்பின் நிறுவன அமைப்பின்படி பொதுக்குழுக் கூட்டம், செயற்குழுக் கூட்டம், குடியிருப்பு அமைப்புக் கூட்டம், துணைக்குழுக்கள் கூட்டம், சுயஉதவிக்குழுக் கூட்டம், சமூகத் தணிக்கைக் குழுக் கூட்டம் ஆகிய அனைத்துக் கூட்டங்களும் முறையாக நடத்தப்பட வேண்டும்.

கூட்டம் நடத்துவதன் அவசியம்

1. உறுப்பினர்களுடன் நல்லுறவு மற்றும் ஒற்றுமையை உருவாக்குதல்
2. உறுப்பினர்கள் தங்களுடைய கருத்தைக் கூற வாய்ப்பளித்தல்
3. உறுப்பினர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வருதல்
4. வெளிப்படைத் தன்மையை உறுதி செய்தல்
5. உரிய நபர்கள் உரிய பயன்களை அடைவதை உறுதி செய்தல்
6. சமுதாய விழிப்புணர்வை அடையச் செய்தல்
7. உறுப்பினர் குழுக்களை சுயச்சார்புத் தன்மையைப் பெறச் செய்தல்

செயற்குழுக் கூட்டம், குடியிருப்பு அமைப்புக் கூட்டம், துணைக் குழுக்கள் கூட்டம், சுய உதவிக் குழுக் கூட்டம், சமூகத் தணிக்கைக்குழுக் கூட்டம் ஆகிய அனைத்துக் கூட்டங்களும் முறையாக நடத்தப்பட வேண்டும்.

குடியிருப்பு அளவிலான அமைப்பு – (கூட்டம்)

1. குடியிருப்பு அமைப்பு சுய உதவிக் குழுக்களுக்கும், கூட்டமைப்பிற்கும் இணைப்பு பாலமாகச் செயல்படும்.
2. கூட்டத் தேதி, இடம் ஆகியவற்றை அனைத்து சுய உதவிக் குழுவினருக்கும் முன்னதாகவே தகவல் தெரிவிக்க வேண்டும்.
3. குறைந்தபட்சம் மாதம் ஒருமுறை கூட்டம் நடத்திட வேண்டும்.
4. குறைந்தபட்சம் 50 விழுக்காடு உறுப்பினர்கள் பங்கேற்க வேண்டும்.
5. கூட்டத்தில் 50 விழுக்காடு உறுப்பினர்கள் பங்கேற்காத நிலையில், மறு கூட்டத் தேதியினை முடிவு செய்து கூட்டம் நடத்தப்பட வேண்டும்.

கூட்டமைப்பின் செயற்குழுக் கூட்டம்

செயற்குழுக் கூட்டம் குறைந்தபட்சம் மாதம் ஒருமுறை தலைவியின் தலைமையில் நடைபெற வேண்டும்.

கூட்டம் நடைபெறுவதற்கு மூன்று தினங்களுக்கு முன்பே நிகழ்ச்சி நிரலினை தகவல் பலகையில் தெரிவித்தல் வேண்டும்.

குறைந்தபட்சம் 50 விழுக்காடு உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும். அவ்வாறு பங்கேற்காத நிலையில்

கூட்டம் நடைபெறுவதற்கு மூன்று தினங்களுக்கு முன்பே நிகழ்ச்சி நிரலினை தகவல் பலகையில் தெரிவித்தல் வேண்டும்.

மறுகூட்டத் தேதியினை ஏழு நாட்களுக்கு முன்னர் அறிவிப்பு செய்து கூட்டம் நடத்த வேண்டும். தேவைப்பட்டால் சிறப்புக் கூட்டம் நடத்திக் கொள்ளலாம்.

செயற்குழுவின் மாதிரிக் கூட்ட நடைமுறை

1. தமிழ்த்தாய் வாழ்த்து
2. உறுதிமொழி வாசித்தல்
3. வரவேற்புரை
4. முன்கூட்டத் தீர்மானங்களை வாசித்து ஆய்வு செய்தல்
5. விவாதிக்கப்பட வேண்டிய பொருள்களை இறுதிப்படுத்துதல்
6. குடியிருப்பு அளவிலான அமைப்பின் மாதாந்திர அறிக்கையினை சரிபார்த்தல்
7. மற்றும் தேவையான நடவடிக்கை எடுத்தல் குழுக்களுக்கு கடன் வழங்குதல் குறித்து தீர்மானித்தல்
8. குழுக்கள் பெற்ற கடன்கள் உரிய காரணத்திற்காக பயன் படுத்தப்பட்டுள்ளதை ஆய்வு செய்தல்
9. தவணைப்படி திரும்பச் செலுத்துவதை ஆய்வு செய்தல்
10. முற்றம் இதழ் குறித்து உறுப்பினர்கள் கருத்துப் பரிமாற்றங்களை மேற் கொள்ளல்
11. இயற்றப்பட்ட தீர்மானங்களைக் கூட்டத்தில் வாசித்து கையொப்பம் பெறுதல்
12. முடிவுகளை மூன்று தினங்களுக்குள் தகவல் பலகையில் வெளியிடுதல்

கூட்டமைப்பின் பொதுக்குழுக் கூட்டம்

பொதுக்குழுக் கூட்டம் ஆண்டிற்கு நான்கு முறை (ஜனவரி–26, மே–1, ஆகஸ்ட்–15, அக்டோபர்–2) நடத்தப்பட வேண்டும்.

பொதுக்குழுக் கூட்ட அறிவிப்பினை அனைத்து தகவல் பலகையிலும் 21 நாட்களுக்கு முன்னர் தெரிவிக்க வேண்டும்.

கூட்டமைப்பின் தலைவி தலைமையேற்று நடத்துவார். அவர் கலந்து கொள்ளாத பட்சத்தில், உறுப்பினர்களில் ஒருவரை தேர்வு செய்து கூட்டம் நடத்த வேண்டும்.

குறைந்தபட்சம் 20 விழுக்காடு உறுப் பினர்களின் பங்கேற்பு மற்றும் குறைந்தபட்சம் 33 விழுக்காடு குழுக்களின் பங்கேற்பும் கூட்டத்திற்கு மிக அவசியம்.

அனைத்துத் தீர்மானங்களும் பெரும்பான்மையோரின் ஒப்புதலோடு எடுக்கப்பட வேண்டும்.

கூட்டமைப்பின்சட்டதிட்டங்களைமாற்றியமைத்தல்மற்றும்'கூட்டமைப்பினை கலைத்தல்' போன்ற முக்கிய முடிவுகளை 2/3 பங்கு உறுப்பினர்களின் ஒப்புதலோடு எடுக்கப்பட வேண்டும்.

கூட்டமைப்பின் பணிகளும் பொறுப்புகளும்

குடியிருப்பு அளவிலான அமைப்பு

இவ்வமைப்பு ஊராட்சி அளவிலானக் குழுக் கூட்டமைப்பு மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு இடையில் ஒரு பாலமாகச் செயல்பட்டு கூட்டமைப்பில் உறுப்பினர்களின் பங்கேற்பை அதிகரிக்கும்.

1. குடியிருப்பில் உள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களையும் குடியிருப்பு அளவிலான அமைப்பில் இணைத்தல்.
2. புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தலுக்கு துணை புரிதல்.
3. அனைத்துக் குழுக்களையும் பலப்படுத்த ஆவன செய்தல். (பயிற்சி, கண்காணிப்பு, தரம் பிரித்தல், நிதி இணைப்பு பெற்றுத் தருதல் போன்றவை)
4. குழுக்களின் கடன் மனுவை பரிசீலனை செய்து கூட்டமைப்பிற்கு பரிந்துரை செய்தல்.
5. பெற்ற கடனை குறிப்பிட்ட நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்துவதை, கடனைத் திரும்பச் செலுத்துதலை உறுதி செய்தல்.
6. குழுக்களின் செயல்பாடு பற்றி மாதாந்திர அறிக்கையை பெற்று கூட்டமைப்பிற்கு சமர்ப்பித்தல்.
7. கூட்டமைப்பின் முடிவுகளை குழுக்களுக்குத் தெரியப்படுத்துதல்.
8. செயற்குழுவின் பணிகள்
9. பொதுக்குழுவின் வழிகாட்டுதல்படி, கூட்டமைப்பின் அனைத்து நடவடிக்கைகளையும் செயற்குழு மேற்கொள்ளும். இதன் பணிகள்

குழுக்கள் அமைத்தல் மற்றும் வலுப்பெறச் செய்தல்

1. குழுக்களை உரிய நேரத்தில் தர மதிப்பீடு செய்ய மற்றும் நிதி இணைப்ன்பு பெற ஏற்பாடு செய்தல்
2. குழு மற்றும் உறுப்பினர்கள் ஏற்ற தொழில்களில் ஈடுபட உதவுதல்
3. அரசு நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களுடனும் காப்பீடு மற்றும் மகளிர் மேம்பாட்டிற்கான உரிய இணைப்பினை ஏற்படுத்துதல்.
4. குழுக்கள் வாங்கிய கடன்களை திரும்பச் செலுத்துவதை தொடர்ந்து கண்காணித்தல்
5. சமூக சுய உதவிக் குழு பயிற்றுநர்களின் செயல்பாடுகளைக் கண்காணித்தல்
6. குழுக்களின் நன்மைக்கான அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபடுதல்

பொதுக்குழுவின் பணிகள்

1. கூட்டமைப்பின் செயல்பாடுகளுக்கு ஒப்புதல் அளித்தல்.
2. செயற்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் தேர்ந்தெடுத்தல்
3. கூட்டமைப்பின் ஆண்டு தணிக்கை அறிக்கைகளுக்கு ஒப்புதல் அளித்தல்
4. சமூகத் தணிக்கைக்குழு அறிக்கையின் மீது விவாதித்தல்

குடியிருப்பு அளவிலான அமைப்பின் நிர்வாகிகள்

குடியிருப்பு அளவிலான அமைப்பின் நிர்வாகிகளாக செயலாளர் மற்றும் பொருளாளர் தேர்வு செய்யப்படுகிறார்கள். இவர்களின் பணிகள் கீழ்வருமாறு

செயலாளரின் பணிகள்

1. குடியிருப்பு அளவிலான அமைப்பின் கூட்டத்தை மாதந்தோறும் நடத்துவது
2. கூட்ட முடிவுகளை தீர்மானப் புத்தகத்தில் எழுதி முறையாகப் பராமரித்தல்
3. கூட்டமைப்பிற்குத் தேவையான அறிக்கைகளை சமர்ப்பித்தல்

பொருளாளரின் பணிகள்

1. குழுக்களின் பதிவேடுகள் சரியாக எழுதப்பட்டுள்ளதை கண் காணித்தல்
2. உறுப்பினர்கள் பெற்ற கடன் தொகை குறிப்பிட்ட நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்துவதை உறுதி செய்தல்

குற்றாலம் சாரல் விழா கண்காட்சி

திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்தில் நடைபெற்ற சாரல் திருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்கள் விற்பனைக் கண்காட்சியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மு. ஜெயராமன், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்கள். மகளிர் திட்ட அலுவலர் திருமதி. ஜி. முத்துமீனாள், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. உல. ரவீந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இக்கண்காட்சியில் 14 சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு ரூ. 3.23 இலட்சம் மதிப்பிலான உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தனர்.

பழமொழியின் பொருள் அறிவோம்

'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்' என்று ஒரு பழமொழி உள்ளது. இப்பழமொழியின் பொருள் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா?

இன்னொருவரின் மகளான மருமகளுக்கு சத்தான உணவுகளை உண்ணக் கொடுத்தால், அவள் வயிற்றில் வளரும் தன் பிள்ளையான பேரப்பிள்ளை நன்றாக வளரும் என்பதுதான் இந்த பழமொழியின் உண்மையான பொருளாகும்.

ஒரு கர்ப்பிணிப் பெண் கர்ப்பக் காலத்தில் 10 கிலோ எடை அதிகரிக்க வேண்டும். காய்கறிகள், பழங்கள், கீரை வகைகள், பால், முட்டை போன்றவற்றை அந்த காலக்கட்டத்தில் வழக்கத்தைவிட சற்று அதிகமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இது வயிற்றில் வளரும் குழந்தையின் வளர்ச்சிக்கும், சுகப் பிரசவத்திற்கும், தேவையான அளவு தாய்ப்பால் சுரப்பதற்கும் பெரிதும் உதவுகிறது என்கிறார்கள் மருத்துவர்கள்.

சமையல்

சமையல் செய்யும்போது சாதம் குழைந்தது விடாமல் இருக்க சாதத்தை வடிக்கும் முன் கொஞ்சம் நல்லெண்ணெய் அல்லது நெய்யை விட்டுப் பின் வடித்தால் சாதம் பொல பொலவென்று இருக்கும்.

நல்லெண்ணெய், கடலெண்ணெயில் பட்சணம் செய்யும் போது எண்ணெய் பொங்காதிருக்க எண்ணெய் காய்ந்ததும் அதில் வாழைப்பழத்தோலின் சிறிய துண்டைப் போட்டுக் கருக அதைப் பொரித்து எடுத்து விட்டால் பிறகு எண்ணெய் பொங்காது.

காய்கறிகளைத் தண்ணீர் ஊற்றி அப்படியே வேக வைக்கக் கூடாது. சாம்பார் கொதித்தவுடன் போட வேண்டும். அப்போதுதான் அதிலுள்ள சத்துக்கள் போகாமலிருக்கும்.

அரிசியையும், பருப்பையும் கலந்து வாசனை வரும் வரை வறுத்து விட்டுக் களைந்து போட்டு வெண் பொங்கலோ அல்லது சர்க்கரைப் பொங்கலோ செய்தால் பொங்கல் சீக்கிரமாக வெந்து விடும். நல்ல வாசனையாகவும் இருக்கும். தனி ருசியுடன் இருக்கும்.

மாங்காய் அல்லது எலுமிச்சை ஊறுகாயில் துண்டுகள் தீர்ந்த பிறகு மீதமுள்ள காரத்திலும், விழுதிலும் காரட் அல்லது முட்டைக்கோசை நறுக்கிப் போடவும். நன்றாக ஊறிய பிறகு அதை சாதத்துடன் கலந்து சாப்பிட்டால் சுவையாக இருக்கும்.

பாகற்காயின் கசப்பு போக முதலில் அவைகளை நறுக்கி உள்ளே இருக்கும் விதைகளை வெளியே எடுத்து விடுங்கள். பிறகு தேவையான அளவுக்கு காய்கறிகளைத் துண்டுகளாக்கிக் கொள்ளுங்கள். சுத்த மான நீரினால் அலம்பி விட்டுப் பிறகு தயிரிலோ, மோரிலோ சிறிது உப்புப் போட்டு ஊற வையுங்கள். ஒரு மணி நேரம் கழித்து சமைத்தால் பாகற்காயிலுள்ள கசப்பு போய் விடும்.

கீரையை வேக வைக்கும் போது அதன் பசுமை நிறம் மாறாமலிருக்க ஆப்ப சோடா ஒரு சிட்டிகை போடவும். அல்லது கீரையை சமைப்பதற்கு முன்பு ஒரு டீஸ்பூன் சர்க்கரையைச் சேர்த்து சமைத்தால் கீரையின் பச்சை வண்ணம் மாறாமல் இருக்கும். கீரை வகைகளை வேக வைக்கும் போது பாத்திரத்தை மூடி வைக்கக் கூடாது. திறந்து வைத்தால்தான் கீரையில் உள்ள கந்தகக் கூட்டுப் பொருள் ஆவியாகி வெளியேறும்.

தோசைவார்ப்பதற்கு முன்பு தோசைக்கல்லில் ஒரு வெங்காயத்தைப் பொடி பொடியாக நறுக்கிப் போட்டு சிறிது எண்ணெயை ஊற்றி வதக்கி எடுத்து விட்டுப் பிறகு மாவை ஊற்றி வார்த்தால் தோசை கல்லுடன் ஒட்டிக் கொள்ளாமல் சுலபமாக எடுக்கப்படுவதுடன் மட்டுமல்ல, கமகமவென்று வாசனையாகவும் இருக்கும்.

நுகர்வோர் சட்டங்கள்

மதுரை காமராசர் பல்கலைக் கழக தொலைதூர இயக்ககம் 'நுகர்வோர் சட்டங்கள்' எனும் ஓராண்டு முதுகலைப் பட்டயப் படிப்பை நடப்பு கல்வியாண்டில் தொடங்கி உள்ளது. பட்டப் படிப்பு முடித்துள்ள மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் அனைவரும் இப்பட்டயப் படிப்பில் சேர்ந்தால் நுகர்வோர் என்ற வகையில் தங்கள் உரிமைகளைப் பற்றி தெரிந்து கொள்ளவும், உரிமைகள் மறுக்கப்படும் போது / பாதிக்கப்படும் போது நுகர்வோர் சட்டங்கள் மூலம் எவ்வாறு தீர்வு காண்பது என்பது பற்றி தெரிந்து கொள்ளவும், இப்பட்டயப் படிப்பு உதவி புரியும்.

வணிக முறைகேடுகளிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள விரும்பும் அனைத்து தரப்பினரும் குறிப்பாக இல்லத்தரசிகளுக்கு இந்த பட்டய படிப்பு பயனுள்ளதாக இருக்கும். இந்த பட்டய படிப்பில் சேருவதற்கான கட்டணம் ரூ. 15,000/– என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சுய உதவிக் குழுவின் மூலம் மகளிர் மேம்பாடு

கொடைக்கானல் அன்னை தெரசா பல்கலைக் கழகத்தின் தொலைதூரக் கல்வி இயக்கத்தில், 'சுய உதவிக் குழுவின் மூலம் மகளிர் மேம்பாடு' என்ற பட்டயப் படிப்பு துவக்கப்பட்டுள்ளது. மகளிர் மற்றும் குழுக்கள் பற்றிய தெளிவான கல்வி அறிவையும், சமூக அறிவையும், சுய உதவிக் குழுக்கள் அமைப்பதின் வழிமுறை, இயக்கம், செயல்பாடு, நிர்வாகம் மற்றும் வங்கியில் கடன் உதவி பெறும் வழிமுறைகளையும், ஆற்றல் மேம்பாடடையவும், இச்சான்றிதழ் படிப்பு உதவும்.

தமிழ் மற்றும் ஆங்கிலம் வழியாக 6 மாதம் பயிலக் கூடிய இப்படிப்பில் சேர கட்டணம் ரூ. 500/– மட்டுமே. எழுத மற்றும் படிக்கத் தெரிந்த அனைவரும் இப்படிப்பில் சேரலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

முனைவர் ஆ. கலைமதி,
இயக்குநர் பொறுப்பு,
தொலை தூரக் கல்வி இயக்ககம்,
அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம்,
கொடைக்கானல் – 624 101.
தொலைபேசி எண்: 04542 241921 (கொடைக்கானல்)
0452 2387355
044 24354111 / 24358216 (சென்னை)

வரலாற்றில் மகளிர்

கல்வி, பேச்சு, எழுத்து, சிந்தனை, ஆய்வு, தொண்டு என்று தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார். 1889இல் தம் 42ஆவது வயதில் அன்னி பெசன்ட்க்கு பிளாவட்ஸ்கி அம்மையாரின் நட்பு கிடைத்தது. அவர் எழுதிய இரகசியக் கோட்பாடுகள் என்ற நூல் அன்னியை மிகவும் கவர்ந்தது. பிளாவட்ஸ்கி அம்மையார் தோற்றுவித்த பிரம்மஞான சபையில் உறுப்பினரானார். இதை பிராட்லா கடுமையாக எதிர்த்தார். ஆனால், அன்னி அதைப் பொருட்படுத்தவில்லை. தாம் பிரம்ம ஞான சபையில் சேர்ந்த காரணங்கள் குறித்து ஒரு நூலினை வெளியிட்டார்.

1891இல் மேடம் பிளாவட்ஸ்கி இறந்தார். அவர் விட்டுச் சென்ற பணிகளை முடிக்க வேண்டிய கட்டாயம் அன்னி பெசன்ட்டிற்கு ஏற்பட்டது. 1893இல் சிகாகோவில் நடந்த உலகப் பெண்கள் மாநாட்டில் அன்னி பெசன்ட் கலந்து கொண்டு, அங்கு அரியதொரு உரையாற்றினார்.

இந்தியாவைப் பற்றி நூல்களின் மூலம் அறிந்த அன்னி பெசன்ட், இந்தியாவின் கலை, கலாச்சாரம், தத்துவம், பண்பாடு, மனிதநேயம் போன்றவற்றால் கவரப்பட்டார். இந்திய மக்களைச் சந்திக்க வேண்டும் என்ற ஆர்வம் அவரிடையே எழுந்தது. அதனால் 1893 நவம்பரில் இந்தியாவிற்கு வந்தார். முதலில் தூத்துக்குடி மண்ணில் கால் வைத்த அன்னி பெசன்ட், இந்தியா முழுவதும் பயணம் மேற் கொண்டார்.

அன்னி பெசன்ட் அம்மையார், இந்தியா வந்தபின் இந்திய மண்ணையே தன் தாய் மண்ணாகப் போற்றினார். இந்தியப் பெண்களைப் போல் உடை உடுத்திக் கொள்ளத் தொடங்கினார். தரையில் அமர்ந்து உணவு உண்டார். இந்தியப் பண்பாட்டையும், நற்கொள்கைகளையும் போதிக்கும் பகவத்கீதையைப் படித்தறிந்தார். இதன் கருத்துகளால் ஈர்க்கப்பட்ட அவர், பகவத் கீதையை உலகத்தார் அறியும்வண்ணம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டார்.

அன்னி பெசன்ட் நாடெங்கும் பெண்கள் மேம் பாடு, சமுதாய மேம்பாடு, கல்வி மேம்பாடு

"சகோதரத்துவம், கலை கலாச்சார பரப்பு முறை, ஒவ்வொருவருக்குள்ளும் மறைந்திருக்கும் சக்தியை வெளிக் கொணர்தல் என்று மூன்று கொள்கைகளும் தம்மைக் கவர்ந்ததாக எழுதியுள்ளார்."



என்பன பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். அத்துடன் இந்தியாவின் பழம் பெருமைகளை எடுத்துக் கூறி, அவற்றைத் திரும்பவும் இந்திய மக்கள் பெற வேண்டும் என்று அவ்வுரைகளில் வற்புறுத்தினார். சென்னை அடையாறில் பிரம்ம ஞான சங்கத்தைத் தோற்றுவித்தார். ஒன்றே குலம் ஒருவனே தேவன், உண்மையே உயர்ந்த மதம் என்பது இச்சங்கத்தின் கொள்கையாகும். ஆல்காட் என்பவர் அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

1901இல் இந்திய மகளிர் இதழ் என்ற பத்திரிக்கையில் பெண் கல்வி என்பது பற்றி அவர் எழுதிய கட்டுரை அனைவரையும் கவர்ந்தது. அதில் இந்தியப் பெண்கள் கல்வி கற்க முன்வரவில்லை என்றால் நாட்டின் எதிர்காலமே முடங்கிப் போய்விடும் என்று எச்சரித்திருந்தார். மேலும் இந்திய மண்ணிற்கும், பண்பாட்டிற்கும் ஏற்ப, உள்நாட்டு கல்வி முறை உருவாக்கப்பட வேண்டும் என்று எடுத்துரைத்தார்.

அன்னி பெசன்ட் நாடெங்கும் பல பள்ளிகளையும், கல்லூரிகளையும் திறந்தார். காசியில் 1897இல் மத்திய இந்துக் கல்லூரியைத் தொடங்கினார். அந்தக் கல்லூரியில் ஆங்கிலம், சமஸ்கிருதம், தத்துவம், இந்து மதம் பற்றிய பாடங்கள் கற்பிக்கப்பட்டன. பின்பு அக்கல்லூரியைப் பல்கலைக் கழகமாக உருவாக்க நினைத்தார். ஆனால் நிதி பற்றாக்குறையால் அதை நிறைவேற்ற இயலவில்லை. பின்பு பண்டித மதன்மோகன் மாளாவியாவின் முயற்சியால் அஃது பல்கலைக் கழகமாகி, காசி இந்து பல்கலைக் கழகம் என்ற பெயரைப் பெற்றது. காசியில் பெண்களுக்காக ஒரு கல்லூரியும்,

இந்திய மகளிர் இதழ் என்ற பத்திரிக்கையில் பெண் கல்வி என்பது பற்றி அவர் எழுதிய கட்டுரை அனைவரையும் கவர்ந்தது. அதில் இந்தியப் பெண்கள் கல்வி கற்க முன் வரவில்லை என்றால் நாட்டின் எதிர்காலமே முடங்கிப் போய்விடும் என்று எச்சரித்திருந்தார்.

மதனப்பள்ளியில் ஒரு பயிற்சிக் கல்லூரியும், சென்னை அடையாறில் தேசியக் கல்லூரியும் நிறுவினார்.

இந்தியப் பெண்களின் நலனுக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் அன்னி பெசன்ட் பெரிதும் பாடுபட்டார். பால்ய விவாகத்தைத் தீவிரமாக எதிர்த்தார். அதனால் நரம்பு சம்பந்தமான நோய்களும், விரைவான முதுமையும் ஏற்படும் என்று எச்சரித்தார். காசி இந்துக் கல்லூரியில் திருமணமான மாணவர்களுக்கு இடமளிக்க மறுத்தார். தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டார். விதவை மணம், கலப்பு மணம் போன்றவற்றை ஊக்குவித்தார். ஆனாலும் அன்னி இளம் விதவைகளை மறுமணம் செய்து கொள்ள வேண்டும் என்று வரையறுத்தார்.

1907இல் ஆல்காட்டின் அவர்களின் மறைவுக்குப் பின் பிரம்மஞான சங்கத்தின் தலைமையை அன்னி பெசன்ட் ஏற்றுக் கொண்டார். 1912இல் உதவும் சகோதரர்கள் என்ற அமைப்பைத் தோற்றுவித்து, அதன் மூலம் இளைஞர்களுக்கு ஆன்மீகமும், கல்வியும், அரசியலும் கற்றுத் தந்தார்.

அன்னி பெசன்ட் இந்திய விடுதலைப் போராட்டத்தைப் பெரிதும் வரவேற்றார். 1913இல் அரசியலில் ஈடுபடத் தொடங்கினார். காங்கிரஸின் விடுதலை நோக்கமும் செயல்பாடுகளும் அம்மையாரைக் கவர்ந்ததால் அதில் தன்னை இணைத்துக் கொண்டார். விடுதலைப் போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை ஈடுபடுத்த ஹோம்ரூல் என்ற இயக்கத்தைத் தொடங்கினார். இவ்வமைப்பில் அனைத்து ஆண்களும் பெண்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இளங்கலைப் பட்டம் பெற்றவர்கள் முழுநேர உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவ்வமைப்பின் செய்திகளை காமன் வீல் என்ற வாரப் பத்திரிகையிலும், நியூ இந்தியா என்ற நாளிதழிலும் வெளியிட்டார்.

ஹோம் ரூல் அமைப்பினைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு அடையாள வில்லை தரப்பட்டது. அவ்வில்லையில் சிவப்பு மற்றும் பச்சை நிறப் பட்டைகள் உண்டு. சிவப்பு நிறம் இந்துக்களையும், பச்சை நிறம் இஸ்லாமியர்களையும் குறித்தன. சிவப்புப் பட்டையில் ஹோம்ரூல் எனப் பொறிக்கப்பட்டிருக்கும். அத்துடன் ஹோம்ரூல் அமைப்பின் அடையாளமாக நட்சத்திரமும் பொறிக்கப்பட்டிருக்கும். முழு சுயாட்சியுடன் கூடிய கிராம பஞ்சாயத்துக்களும், நகராட்சிகளும், மாகாண சட்ட சபைகளும் அமைத்து, தேசிய பாராளு மன்றத்தை உருவாக்கி, அனைத்துக்கும் சமவுரிமை கொடுத்து, செயல்படுத்துவதே ஹோம்ரூல் இயக்கக் கொள்கையாகும்.

இந்தியப் பெண்களின் நலனுக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் அன்னி பெசன்ட் பெரிதும் பாடுபட்டார். பால்ய விவாகத்தைத் தீவிரமாக எதிர்த்தார். அதனால் நரம்பு சம்பந்தமான நோய்களும், விரைவான முதுமையும் ஏற்படும் என்று எச்சரித்தார்.

பாலகங்காதர திலகர் அந்த அமைப்பிற்கு பெரும் ஆதரவு தந்து புனேயில் 1916 ஏப்ரலில் அவ்வமைப்பைத் தோற்றுவித்தார். அவர் தம் கேசரி என்ற நாளிதழின் மூலமாகவும், தி மராத்தா என்ற வார இதழின் மூலமாகவும், ஹோம்ரூல் இயக்கம் பற்றிய பிரச்சாரத்தை மேற்கொண்டார். இந்திய ஹோம்ரூல் இயக்கம் இங்கிலாந்திலும் 1916இல் தோற்றுவிக்கப்பட்டது. (தொடரும்)



எச்1 என்1

பன்றிக் காய்ச்சலிலிருந்து உங்களையும் உங்கள் குடும்பத்தையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்

பன்றிக் காய்ச்சல் பன்றிகளால் பரவுவதில்லை. காற்றில் உள்ள நோய்க் கிருமிகள் மூலம் மனிதனிலிருந்து மனிதனுக்கு பரவுகிறது.

இதற்கு தேவையான மருந்துகள் உள்ளன. இந்தியாவில் இந்த நோய் நுழைவதைத் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

செய்ய வேண்டியது

1. இருமல் அல்லது தும்மலின் போது கைக்குட்டை அல்லது துணியை உங்களது வாய் மற்றும் மூக்கில் வைக்கவும்
2. உங்களது மூக்கு, கண் அல்லது வாயை தொடுவதற்கு முன்பும் பின்பும் சோப்பு மற்றும் தண்ணீரால் உங்களது கைகளை முழுவதுமாக கழுவவும்
3. இருமல், தும்மல் மற்றும் ஜுரம் உள்ள நபர்கள் பொது இடங்களில் சிறிது தூரம் தள்ளி நிற்கவும்
4. நன்றாகத் தூங்கவும், சுறுசுறுப்பாக இருக்கவும். மற்றும் மன அழுத்தத்தை கட்டுக்குள் கொண்டு வரவும்
5. தண்ணீர் அதிகமாகக் குடிக்கவும். மற்றும் சத்துள்ள உணவை சாப்பிடவும்.
6. அறிகுறிகளில் உள்ள ஏதாவது ஒன்று இருப்பின் துணி அல்லது முக கவசத்தை உங்களது முகத்தில் வைத்த பிறகு மருத்துவரைப் பார்க்கவும்.

செய்யக் கூடாதது

1. கை குலுக்குதல், அணைத்தல் மற்றும் முத்தமிடுதல் அல்லது உடல் ரீதியாக இதர தொடுதல்கள்
2. மருத்துவரின் ஆலோசனை பெறாமல் மருந்து சாப்பிடுதல்
3. பொது இடங்களில் எச்சில் துப்புதல்

அறிகுறிகள்

பன்றி காய்ச்சல் அறிகுறிகளில் ஜுரம், இருமல், தொண்டை வலி, மூக்கு ஒழுகுதல் மற்றும் மூச்சு விடுவதில் சிரமம் போன்றவை

உடன் தொடர்பு கொள்ளவும்

044-24321569

நூல் அறிமுகம்

பெண்ணின் பெருமை

திரு. வி. கலியாணசுந்தரனார்
வெளியீடு: பூம்புகார் பதிப்பகம்,
தொலைபேசி: 25267543
விலை ரூ. 50/-

பிறப்பிலும், வாழ்விலும், எளிமை யாக இருந்த போதிலும், எழுத்திலும் சொல்லிலும் செயலிலும் பெருமை பெற்று விளங்கிய வி. கலியாணசுந்தரனாரின் இந்நூல் பெண் பெருமை பெறின், நாடும் பெருமை பெறும் என்னுங் கருத்தினைக் கொண்டு, பெண்களை பெருமைபடுத்தும் பல கருத்துக்களை எளிய இனிய முறையில் அனைவரும் வியக்கும் வண்ணம் விளக்கி எழுதியுள்ளார்.



நூல் அறிமுகம்

அறிவியல் கதைகள்

திரு. பெ. நா. அப்புஸ்வாமி
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-98.
தொலைபேசி: 26359906, 26251968
பக்கங்கள்: 115
விலை: ரூ. 50/-

எந்த சிக்கலான செய்தியையும் கதைகளின் மூலமாகக் கற்பிக்க முடியும். இது நமது நாட்டில் நெடுங்காலமாக அறியப்பட்ட உண்மை. அப்படி அனைவருக்கும் வேண்டிய சுவையான அறிவியல் செய்தி களை அறிந்து கொள்ள உதவும் வகையில் அவற்றை கதைகள் வடிவில் அளித்து அனைவரும் பயன் பெறும் வண்ணம் வழங்கியுள்ளனர்.

உங்கள் உடல் நலம், சட்டம் மற்றும் பொதுநலம் குறித்த அனைத்து சந்தேகங்களுக்கான கேள்விகளுக்கும் நிபுணர்களின் பதில்கள் காத்திருக்கின்றன

திருமதி. மல்லிகா, மகரந்தம் மகளிர் சுய உதவிக்குழு, அரக்கோணம்

கேள்வி: டாக்டர் எனக்கு வயது 45. எனக்கு திருமணமாகி 20 வருடங்களாகிறது. என் வீட்டு வேலைகளை முழுவதும் நான்தான் பார்த்துக் கொள்கிறேன். கடந்த 6 மாதத்திற்கு முன் என்னுடைய வலது குதிகாலில் அதிகமாக வலி ஏற்பட்டதால் மருத்துவரை அணுகினேன். அவர் எக்ஸ்ரே எடுத்து பார்த்துவிட்டு குதிகாலில் எலும்பு வளர்ச்சி உள்ளதாக சொன்னார். இதை கட்டுப்படுத்த முடியுமா? இவற்றிற்கு என்ன செய்ய வேண்டும்?

பதில்: டாக்டர் ஆர். சுகன்யா
சித்த மருத்துவ நிபுணர்

சகோதரியே உங்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த எலும்பு வளர்ச்சியை Calcanal Spur என்று ஆங்கிலத்தில் கூறுவர். இது அதிகமாக நின்று கொண்டு வேலை செய்யும் போதும், பெண்களுக்கு மாதவிடாய் நிற்கும் காலத்தில் கால்சியம் சத்து குறைவதால் இதுபோன்ற பிரச்சனை ஏற்படுகின்றது. இது பெரும்பாலான வீட்டு வேலை செய்யும் மகளிருக்கு ஏற்படுவது உண்டு. இவ்வாறு ஏற்படும் எலும்பு வளர்ச்சியை குறைப்பது கடினம். ஆனால் மேற்கொண்டு வராமல் தடுக்க முடியும். இதற்கு நீங்கள் உயரமான குதிகால்களை கொண்ட காலணிகளையும், கடினமான காலணிகளையும் அணியக் கூடாது. அதிக நேரம் நின்று வேலை செய்யக்கூடாது. நேரம்கிடைக்கும்போது நாற்காலியில்அமர்ந்து ஓய்வெடுக்கவும். இதனால் ஏற்படும் வலியைக் குறைக்க எருக்கம் பழுப்பு இலைகளை சூடு செய்த செங்கல்லின் மீது வைத்து மிதித்து வர வலி குறையும். மேற்கொண்டு நீங்கள் உங்கள் மருத்துவரின் ஆலோசனைப்படி நடப்பது நன்று.

உயரமான குதிகால்களை கொண்ட காலணிகளையும், கடினமான காலணிகளையும் அணியக் கூடாது. அதிக நேரம் நின்று வேலை செய்யக் கூடாது.

திருமதி. இந்திராணி விருதாச்சலம், கடலூர் மாவட்டம்.

கேள்வி: என் கணவரின் கெட்ட நடத்தை மற்றும் தீயப் பழக்கங்களின் காரணமாக நான் என் கணவரை விட்டு பிரிந்து தனியே மூன்று குழந்தைகளுடன் வாழ்ந்து வருகிறேன். எங்களுக்குள் முறையான விவாகரத்து ஏதும் நடைபெறவில்லை. இதுநாள் வரை அவரிடமிருந்து எந்த பண மற்றும் பொருளுதவியும் பெறவில்லை. இப்பொழுது நான் முறையான பராமரிப்புத் தொகை / ஜீவனாம்சம் கோர முடியுமா? ஜீவனாம்சம் பெற சட்டப்படி விவாகரத்து பெற்று இருக்க வேண்டுமா?

பதில்: திருமதி. சர்மிளா ஜான் லூயிஸ்
வழக்கறிஞர், திருவாரூர்

ஜீவனாம்சம் / பராமரிப்புத் தொகை பெற முறையான முறைப்படி விவாகரத்து பெற்றிருக்க வேண்டிய கட்டாயம் கிடையாது. ஒரு வருடத்திற்கு மேல் கணவனை பிரிந்து வாழும் எந்த மனைவியும் ஜீவனாம்சம் பெற தகுதியுடையவர் ஆவார். குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் 125ஆம் பிரிவுபடி மனு தாக்கல் செய்வதின் மூலமோ அல்லது மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்வதன் மூலமோ பெற்றுக் கொள்ளலாம்.

1. எதிர் மனுதாரரின் மாதாந்திர வருமானம்
2. மனுதாரர் மற்றும் அவருடன் வாழும் குழந்தைகளின் எண்ணிக்கை
3. மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரரின் வாழ்க்கைத் தரம் இவற்றை மனதில் கொண்டு நீதிபதியால் ஜீவனாம்சம் / பராமரிப்புத் தொகை நிர்ணயிக்கப்படும்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்

வினா - விடை

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மறுசீரமைப்பு செய்ய வெளியிடப்பட்ட அரசு ஆணை எது?
அரசு ஆணை (நிலை) எண். 125 தேதி 21.07.2008 – ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை.

தமிழகத்தில் உள்ள மொத்த கிராம ஊராட்சிகள் எத்தனை?
தமிழகத்தில் மொத்தம் 12,618 கிராம ஊராட்சிகள் உள்ளன.

கூட்டமைப்புகள் எந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்றன?
தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 27, 1975 கீழ் பதிவு செய்யப்படுகின்றன.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் எத்தனை நிலைகளில் மாற்றி மறுசீரமைக்கப்படும்?
ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் இரு நிலைகளில் மாற்றி மறுசீரமைக்கப்படும்.

குடியிருப்பு அளவிலான மன்றம் அமைக்க எத்தனை குழுக்கள் தேவை?
குறைந்தபட்சம் 5 தகுதி வாய்ந்த குழுக்கள் தேவை சுய உதவிக் குழுக்கள், கூட்டமைப்பில்

இணைவதற்கு அடிப்படைத் தகுதி என்ன?
குழுக்கள் துவங்கி, 6 மாதங்கள் நிறைவடைந்து தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற குழுக்கள்

ஒரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அமைக்க குறைந்தபட்சம் எத்தனை குழுக்கள் இருக்க வேண்டும்?
ஒரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அமைக்க தகுதி வாய்ந்த 10 குழுக்கள் இருக்க வேண்டும்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கும், மகளிர் சுய உதவிக் குழுவிற்கும் இடையே பாலமாகச் செயல்படும் அமைப்பு எது?
குடியிருப்பு அளவிலான மன்றம் (HLF)

குடியிருப்பு அளவிலான மன்றக் (HLF) கூட்டம் எங்கு நடைபெற வேண்டும்?
அந்தந்தக் குடியிருப்புகளிலேயே மன்றக் கூட்டம் நடைபெற வேண்டும்.

குடியிருப்பு அளவிலான மன்றக் கூட்டம் மாதம் எத்தனை முறை நடைபெற வேண்டும்?
மாதம் ஒரு முறை நடைபெற வேண்டும்.

மாநில மற்றும் மாவட்ட அளவிலான
முதன்மை பயிற்றுநர்கள்

பெண்களை அடிமைகளாய் வைத்திருந்த காலம் மாறி இன்று பெண்கள் விண்ணையும் தொடும் அளவிற்கு உயர்ந்து வருகின்றனர்.

மருத்துவம், விஞ்ஞானம், ராணுவம், சட்டம், காவல், வங்கி, கணிப்பொறி, கல்வி, கலை, அரசியல், அரசு நிர்வாகம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் ஆணுக்கு நிகராக பெண்கள் ஈடுபட்டு சாதனை பல புரிந்து வருகின்றனர். நமது அரசும் திட்டங்கள் பல தீட்டி மகளிர் முன்னேற்றத்திற்கு முனைப்புடன் செயல்பட்டு, சுய உதவிக் குழுக்கள் பல அமைத்து பொருளாதார ரீதியாகவும், சுய சார்புடனும் வாழ வழி ஏற்படுத்தி வருகிறது. சுய உதவிக் குழுக்களின் செயல்பட்டினை அனைவரும் அறிந்து கொள்ளும் வண்ணம் வெளிவருகின்ற முற்றம் இதழ், சாதனை படைத்த மகளிரை பேட்டி கண்டு அதை பிரசுரித்து வருவது அனைவரும் அறிந்ததே. இம்மாதம் முற்றம் இதழ் வாயிலாக வாசகர்களை சந்திக்க இருப்பது மரியாதைக்குரிய மரியம் சாதிக், இ.ஆ.ப., அவர்கள்.

தங்களின் குடும்பப் பின்னணி குறித்து...

எனது சொந்த ஊர் சென்னை. எனது தந்தையார் ஒரு தொழிலதிபர். தாயார் குடும்பத் தலைவியாக உள்ளார். என்னுடைய தம்பி துபாயில் உள்ள பன்னாட்டு நிறுவனத்தில் நிர்வாக மேலாளராகப் பணி புரிகிறார்.

பள்ளி மற்றும் கல்லூரிப் படிப்பு ஆகியவை...

நான் சென்னையில் உள்ள சர்ச் பார்க் கான்வென்டில்தான் படித்தேன். இளங்கலை வணிகவியல் படிப்பை ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியிலும், முதுகலை வணிகவியல் படிப்பை சென்னை எஸ்.ஐ.இ.டி. கல்லூரியிலும் படித்தேன்.

இந்திய ஆட்சிப் பணித் துறையைத் தேர்ந்தெடுக்க காரணம்?

சிறு வயதில் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு ஒரு முறை சென்றிருந்தேன். அங்கு அப்பொழுது மாவட்ட ஆட்சியரைச் சந்திக்க ஏராளமான பொதுமக்கள் காத்திருந்தனர். பொதுமக்களின் எதிர்பார்ப்பும், மாவட்ட ஆட்சியர் மீது அவர்கள் வைத்திருந்த மரியாதையும் கண்ட நான், மக்கள் தொண்டு செய்வதற்கு பெரிய அளவில் வாய்ப்புள்ள பதவி இந்திய ஆட்சிப் பணிதான் என்பதை உணர்ந்தேன்.

மேலும் இந்தப் பணியின் மூலம் எவ்வளவோ ஏழை எளிய மக்களுக்கும் மற்றும் அவல நிலையில் உள்ளவர்களுக்கும் உதவ முடியும் என்பதனை உணர்ந்து, நானும் இந்தப் படிப்பினை முடித்து, இ.ஆ.ப. பதவிக்கு வர வேண்டும் என்ற ஆவல் முதன் முதலில் எனக்கு ஏற்பட்டது.

நான் இந்தப் படிப்பைத் தேர்ந்தெடுத்து படிப்பதற்கு எனது தந்தை, தாய் மற்றும் எனது தம்பி ஆகியோர் பெரிதும் உறுதுணையாக இருந்தார்கள். அவர்கள் கொடுத்த ஊக்கமும், நான் படித்த பள்ளி மற்றும் கல்லூரி ஆகியவற்றின் ஆசிரிய – ஆசிரியர்கள் அளித்த ஊக்கமும் எனது வெற்றிக்கு முக்கிய காரணம் ஆகும். நான் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இத்துறையில் தாங்கள் சாதிக்க விரும்புவது...

மக்களுடைய உடல் நலம் சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம் காத்திட உறுதுணை செய்தல், அனைவருக்கும் கல்வி கிடைத்திட குழந்தைகளின் படிப்பிற்கு வழி செய்ய வேண்டும். பொருளாதார அடிப்படையில் மக்கள் அனைவரும் தங்களின் சொந்த காலில் நின்று, பொருளாதார வளர்ச்சி அடைய உதவ வேண்டும். தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டங்களின் மூலம் பெண்கள் பொருளாதாரத்தில் உயர்வு பெற ஊக்குவித்தல் போன்ற வைகளில் சாதிக்க விரும்புகிறேன்.

“ உதாரணமாக பெண்கள் என்ன படிக்க வேண்டும் என நினைப்பதில் கூட ஆண்களே முடிவு எடுப்பவர்களாக உள்ளார்கள். ஆகவே பொருளாதார ரீதியாக அதிகம் முன்னேற்றம் அடைந்தும் கூட, சமுதாய ரீதியாக பெண்களுக்கு இன்னும் அதிக முன்னேற்றம் தேவை. ”

எழுத்துத் துறையில் தங்களுக்கு உள்ள ஆர்வம் குறித்து...

தனியாக எந்த நூலும் எழுதவில்லை. இருப்பினும் புத்தகங்கள் வாசிப்பதில் அதிக ஆர்வம் உள்ளது.

பெண் சாதனையாளர்களில் தங்களைக் கவர்ந்தவர்கள்...

வாழ்வில்சாதனையாளர்கள்என்றால் வாழ்வில் சாதித்த அனைவருமே என்னைக் கவர்ந்தவர்கள்தான். அன்னை தெரசா, கிரண்பேடி, கல்பனா சாவ்லா, ஹெலன் கெல்லர், பி.டி.உஷா, சானியா மிர்ஷா போன்றவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள்.

தற்காலப் பெண்களின் நிலை குறித்து தங்களின் கருத்து...

கடந்த 10, 20 ஆண்டுகளை விட தற் போது அதிக அளவில் பெண்கள் பணிபுரிய வருகின்றனர். கணினி, மருத்துவம், இ.ஆ.ப. போன்ற துறைகளில் பெருமளவில் பெண்கள் பங்காற்றுகின்றனர். இந்த ஆண்டு நடைபெற்ற இ.ஆ.ப. தேர்வில் தேர்ச்சி பெற்ற 111 பேர்களில் 32 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பெண்கள் பொருளாதார அடிப்படையில் முன்னேற்றம் அடைந்து, எல்லாத் துறைகளிலும் பதவிகள் பல வகித்தாலும் கூட,

பல நேரங்களில் அவர்களை இயக்குவது ஆண்களாகத்தான் இருக்கின்றனர். உதாரணமாக இட ஒதுக்கீடு அடிப்படையில் பஞ்சாயத்து தலைவர், ஒன்றிய தலைவர் போன்ற பதவிகளில் பெண்களை நியமித்தாலும் கூட, அவர்களின் பின்புலமாக, அப்பெண்களின் கணவரோ அல்லது மகனோ இருந்து இயக்கி வருகின்றனர் என்பதுதான் பல இடங்களில் உண்மை யாக உள்ளது. சாதாரணமாகக் கூட தன் சம்பந்தப்பட்ட விஷயங்களில் அவர்களாகவே முடிவு எடுக்க முடிவதில்லை. உதாரணமாக பெண்கள் என்ன படிக்க வேண்டும்

என நினைப்பதில் கூட ஆண்களே முடிவு எடுப்பவர்களாக உள்ளார்கள். ஆகவே பொருளாதார ரீதியாக அதிகம் முன்னேற்றம் அடைந்தும் கூட, சமுதாய ரீதியாக பெண்களுக்கு இன்னும் அதிக முன்னேற்றம் தேவை.

சிலர் இ.ஆ.ப. படிக்க வேண்டும் என்று நினைத்தேன், ஆனால் குடும்பச் சூழ்நிலை, பொருளாதாரச் சூழ்நிலை போன்ற காரணங்களால் என்னால் படிக்க முடிய வில்லை என்பார்கள். அவர்களுக்கு நான் கூறுவது என்னவெனில் பிரச்சனை இல்லாமல் யாரும் இல்லை. பிரச்சனைகளைக் கண்டு நொந்து விடாமல், தைரியம், சாமார்த்தியம், சாதூர்யம் இவைகளால் பிரச்சனைகளை எதிர் கொண்டு, தேவையான அளவு உழைப்பு இருந்தால் எதுவும் சாதிக்கலாம். தோல்வியைக் கண்டு துவண்டு விடக் கூடாது. தொடர்ந்த முயற்சியின் காரணமாகத்தான் வெற்றி கிடைக்கும். எந்த முயற்சியில் ஈடுபடும்போதும் நம்பிக்கையும், மன உறுதியும் வேண்டும். சிலர் வாழ்க்கையில் முன்னேற முடியாததற்கு சந்தர்ப்பம், சூழ்நிலை சரியில்லை என காரணம் கூறுவார்கள். அவர்களுக்கு நான் கூறுவது, “பிரச்சனையே இல்லாதவர்கள் வெற்றியாளர்கள் அல்ல. பிரச்சனையை வெற்றி கொண்டவர்களே சாதனையாளர்கள்” (Winners are not the ones without problems. They are the ones who overcome the problems) என்பது எனது கருத்தாகும்.

கிராமப்புறத்தில் உள்ளவர்கள் இ.ஆ.ப. (IAS) தேர்வு எழுதி வெற்றி பெற தாங்கள் கூறும் அறிவுரை...

இ. ஆ. ப. படிப்பதற்கு பெரும் செலவு ஏற்படும் என சிலர் தவறாக எண்ணிக் கொண்டுள்ளனர். இ.ஆ.ப. படிப்பிற்கு பணம் ஒரு பொருட்டல்ல. திறமை,

> தேவையான அளவு உழைப்பு இருந்தால் எதுவும் சாதிக்கலாம். தோல்வியைக் கண்டு துவண்டு விடக் கூடாது. தொடர்ந்த முயற்சியின் காரணமாகத்தான் வெற்றி கிடைக்கும்.

பிரச்சனையே இல்லாதவர்கள் வெற்றியாளர்கள் அல்ல

பிரச்சனையை வெற்றி கொண்டவர்களே சாதனையாளர்கள்

மரியம் சாதிக், இ.ஆ.ப.,

அயராத உழைப்பு, ஆர்வம், நிறைய நூல்களைப் படித்தல், அன்றாட நாட்டு நடப்பினை அறிந்து கொள்ளுதல் போன்றவை அவசியம். மேலும் இந்த ஆண்டு நடைபெற்ற இ.ஆ.ப. தேர்வில் அதிக அளவில் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள் வெற்றி பெற்றுள்ளனர். மேலும் தமிழ் வழியிலேயே எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளலாம். கிராமத்தில் தமிழ் வழியில் படித்தவர்கள் கூட இ.ஆ.ப. தேர்வினை எழுதி மாபெரும் வெற்றி பெற்று இருக்கிறார்கள்.

தொடர்ந்த முயற்சியின் காரணமாகத்தான் வெற்றி கிடைக்கும். எந்த முயற்சியில் ஈடுபடும்போதும் நம்பிக்கையும், மன உறுதியும் வேண்டும். சிலர் வாழ்க்கையில் முன்னேற முடியாததற்கு சந்தர்ப்பம், சூழ்நிலை சரியில்லை என காரணம் கூறுவார்கள்.

சுய உதவிக் குழுப் பெண்களுக்கு தாங்கள் கூற விரும்புவது...

சுய உதவிக் குழுப் பெண்களுக்கு தங்கள் சொந்தக் காலில் நிற்கும் தைரியம் ஏற்பட்டுள்ளது. அரசும் அவர்களுக்கு ஆண்டுதோறும் சுழல் நிதி மானியம், வங்கிக் கடன் ஆகியவைகளின் மூலம் தொழில் முனைவோராக பெண்களை உருவாக்கி வருகிறது.

ஆண்டுதோறும் புதிய புதிய குழுக்களும் உருவாக் கப்பட்டு மகளிருக்கு மகத்தான சேவையை அரசு ஆற்றி வருகிறது. அதன் மூலம் மகளிர் நலன் காக்க எனது வாழ்த்துகள்.

தீண்டாமை

தென்றலை மேகம் தொட மறுத்தால்
தீண்டிடும் மழை ஏது?
மலரைக் காற்றுத் தொட மறுத்தால்
மலரில் வாசம் ஏது?
உணவை உயிர் தொட மறுத்தால்
உலகினில் உயிர் ஏது?
உளியை சிற்பி தொட மறுத்தால்
உன்னத சிலை ஏது?
சிப்பியை நீர் தொட மறுத்தால்
சிப்பிக்குள் முத்து ஏது?
மனிதனை மனிதன் தொட மறுத்தால்
மண்ணில் ஒற்றுமை ஏது?

என். ஷண்முகம், 10ம் வகுப்பு,
சர்.எம்.சிடி.எம். மேல்நிலைப்பள்ளி,
புரசைவாக்கம், சென்னை – 600 084.
நன்றி தினத்தந்தி

இந்த இதழ் முதல்
முற்றத்தில்
சிறுவர்
பகுதி
இனிதே
ஆரம்பம்
உங்கள் வீட்டுப்
பிள்ளைகளின்
படைப்புகளை
வெளிப்படுத்த
அற்புதத் துவக்கம்

“

காரம் உடலுக்குத் தேவையான
வெப்பத்தை அளிக்கிறது.
கசப்பு உடலில் உள்ள உதவாத கிருமிகளை
அழிக்கிறது. சக்தியை அளிக்கிறது.
இனிப்பு உடலில் ஏற்படும் தசை வளர்ச்சிக்கு
உதவுகிறது.
புளிப்பு இரத்தக் குழாயில் உள்ள அழுக்கை
நீக்குகிறது.
துவர்ப்பு உடலில் அடிபடும்போது வெளியேறும்
இரத்தத்தை உறையச் செய்து, இரத்தம்
வீணாகாமல் பாதுகாக்கிறது.
உப்பு நினைவுத் திறனை அதிகரிக்கிறது.
இவைகள் எல்லாம் அளவோடு இருந்தால்தான்
மேற்கண்ட பலன்களைப் பெற முடியும்.

ஜி. ஆர். விக்னேஷ், 7ம் வகுப்பு,
மகரிஷி பன்னாட்டு உறைவிடப்
பள்ளி, சுங்குவார் சத்திரம், காஞ்சிபுரம்
நன்றி தினத்தந்தி

”

மோதிரக் கை

ஒரு நாள் மன்னர் அக்பர் கோபமாக இருந்தார். உடனே மந்திரிகளை அழைத்தார்.
“நேற்று இரவு ஒருவன் என் மீசையை இழுத்து விட்டான். என்னை ஓங்கி மிதித்து விட்டான். அவனை என்ன செய்யலாம்? சொல்லுங்கள். உடனே யோசனை சொல்லுங்கள்” அக்பர் உறுமினார்.
மந்திரிகளுக்கு கோபம் வந்தது.
அனைவர் முகமும் சிவந்தது.
“என்ன தைரியம்? உடனே அவனை கைது செய்ய வேண்டும் சிறையில் அடைக்க வேண்டும்” என்றார் ஒரு மந்திரி.
“மன்னர் மீசையை இழுத்த கையை வெட்ட வேண்டும்” என்றார் இன்னொரு மந்திரி.
“அதுமட்டும் போதாது. அவனை சிரச்சேதம் செய்ய்ய வேண்டும்” என்றார் ஒருவர்.
ஆத்திரம். ஆளாளுக்குப் பேசினார்கள். ஆத்திரத்தில் அறிவுக்கு இடம் இல்லை.
மந்திரி பீர்பால் புத்திசாலி. அப்போதுதான் அவைக்கு வந்தார்.
பீர்பாலிடம் நடந்ததை கூறினார்கள்.
“நீங்கள் சொல்லுங்கள். எனது மீசையை இழுத்த கையை என்ன செய்யலாம்?” என்றார் மன்னர் அக்பர்.
பீர்பால் லேசாக சிரித்தார்.
“மன்னரின் மீசையை இழுத்த கைக்கு முத்தம் தர வேண்டும். மோதிரம் போட வேண்டும்...” என்றார்.
“என்ன பீர்பால் உனக்கு மூளை இருக்கிறதா?” மந்திரிகள் கோபமாக கத்தினார்கள்.
உடனே பீர்பால் சொன்னார்...
“முதலில் மன்னர் அறைக்குள் யாரும் செல்ல முடியாது. அப்படி சென்றாலும் மன்னர் மீசையை இழுக்கும் தைரியம் யாருக்கும் வராது...”
“அப்படி என்றால் வேறு யார்?”
“வேறு யார், மன்னரின் பேரக் குழந்தையாகத்தான் இருக்க வேண்டும்” என்றார் பீர்பால்.
மன்னர் சிரித்தார். மகிழ்ச்சி அடைந்தார்.
“பீர்பால் நீ சொன்னது உண்மைதான்...” என்றார்.
பீர்பாலின் அறிவை எல்லோரும் பாராட்டினார்கள்.

பெண்ணே பெருஞ்செல்வம்

பெண்ணோடு வர வேண்டும்
பெருஞ்செல்வம் என்று
மண்ணோடு போகும் முன்
மதிமயங்கும் மானிடரே
கண்ணுக்கு நிறைவான
கன்னிகை ஒருத்தியே
விண்ணுக்கு நிகரான
வையத்தில் பெருஞ்செல்வம்

பெ. அரங்கசாமி
எண். 12, 8வது சந்து,
பெல் நகர், மேடவாக்கம்,
சென்னை – 600 100.

தஞ்சாவூர் ஓவியங்கள்
சரஸ்வதி மகளிர் சுய உதவிக் குழு
மேட்டுத் தெரு, சமயபுரம்,
திருச்சி மாவட்டம்.
செல்பேசி 97904 11262
விலை ரூ. 250/– முதல்

அழகிய மர பொம்மைகள்
துளசி மகளிர் சுய உதவிக் குழு
பழைய காயல், ஸ்ரீவைகுண்டம்,
தூத்துக்குடி மாவட்டம்.
செல்பேசி 94420 53646
விலை ரூ. 150/– முதல்

சுவர் ஓவியங்கள்
ரோஜா மகளிர்
சுய உதவிக் குழு
புத்தன் குடியிருப்பு,
திருநெல்வேலி மாவட்டம்.
செல்பேசி 9790401230
விலை ரூ. 150/– முதல்

சிறப்பான மரச் சிற்பங்கள்
பாரதியார் சிறப்பு கைவினைஞர்கள்
சுய உதவிக் குழு,
தம்மம்பட்டி, சேலம் மாவட்டம்.
செல்பேசி 94439 90147
விலை ரூ. 500/– முதல்



கலைநயம் மிக்க பரிசுப் பொருட்கள்
அந்தி மந்தாரை சுய உதவிக் குழு
பாண்டவர் மங்கலம்,
கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்.
செல்பேசி 99441 70386
விலை ரூ. 50/– முதல்

தரமான காகிதப் பைகள்
ஜவகர் மகளிர் சுய உதவிக் குழு
மாரியம்மன் கோவில் தெரு,
தஞ்சை மாவட்டம்.
விலை ரூ. 10/– முதல்

அதிவிரைவில்
எதிர்பாருங்கள்



வண்ணமிகு பெட்டிகள்
வள்ளுவர் வாசுகி சுய உதவிக் குழு
அயோத்தியாப்பட்டணம்,
சேலம் மாவட்டம்.
செல்பேசி 92451 03063
விலை ரூ. 50/- முதல்

சிறப்பான பொம்மைகள்
காந்திஜி மகளிர் சுய உதவிக் குழு
இராமேஸ்வரம்,
இராமநாதபுரம் மாவட்டம்.
செல்பேசி 94436 17041
விலை ரூ. 50/- முதல்

வனப்பான ஓவியங்கள்
உலகம்மாள் மகளிர் சுய உதவிக் குழு
தென் பொதுவக்குடி, பரமக்குடி,
இராமநாதபுரம் மாவட்டம்.
தொலைபேசி 04564 - 221407
விலை ரூ. 50/- முதல்

நவராத்திரி விற்பனைக் கண்காட்சி

அலங்காரப் பொருட்கள், ஆயத்த ஆடைகள், வீட்டு உபயோகப் பொருட்கள், கண்கவர் கலைப் பொருட்கள் மற்றும் அனைத்து விதமான பொருட்களும் கிடைக்கும்

ஆதரவுக் கரம்...

மழலைக்கு தாய் நீட்டுவது பாசக்கரம்!
மனிதனுக்கு கல்வி நீட்டுவது அறிவுக்கரம்!
பூமிக்கு மழை நீட்டுவது கருணைக்கரம்!
மனைவிக்கு கணவன் நீட்டுவது அன்புக்கரம்!
மனிதனுக்கு வாழ்க்கை நீட்டுவது அனுபவக்கரம்!
கரங்கள் எத்தனை இருந்தாலும்
அடுத்தவருக்கு உதவிட நீளும் கரமே
உலகினில் சிறந்த கரமாகும்!

சவ்வாஸ் ஆசியம்மாள்
பள்ளப்பட்டி,
கரூர் மாவட்டம்.

ஒரு சின்ன குச்சியின் உச்சியில்
சேமித்து வைத்த நெருப்புதான்
ஒரு பெரிய காட்டையே எரிக்கிறது!

பெண்ணே...!

எட்டி விடும் தூரத்தில் வானம்,
தொட்டுவிடும் தூரத்தில் மேகம்,
பேதையாய்க் கூட இருந்திடலாம்
கோழையாய் இருந்திடலாமோ?
பூமியைப் பற்றும் வேர்களைப் போல
நீ நம்பிக்கையில் பற்றுக் கொள்;
உன்னால் முடியும்
ஒரு சின்ன குச்சியின் உச்சியில்
சேமித்து வைத்த நெருப்புதான்
ஒரு பெரிய காட்டையே எரிக்கிறது!
வாழ்வின் ஒவ்வொரு கணமும்
உனக்குப் பெருமையுடையதாகும்;
புதைக்கின்ற விதையும் முயற்சித்தால்தான்
பூமியும் கூட தாழ் திறக்கும்!

திருமதி. கே. சாவித்திரி கனகசபை
அருந்தவம் மகளிர் சுய உதவிக்குழு,
ஓலையாம்புதூர், புத்தூர், நாகை மாவட்டம்.

வெள்ளி நகாசு பயிற்சி
தினமும் 100/– ரூபாய் சம்பளமாகப் பெறுகின்றனர்.
பக்கம்... 36

சிறப்பு நிதி
சிறப்பு நிதி பெற்று கன்னியப்பன் பயனடைந்துள்ளார்.
பக்கம்... 37

வறுமை ஒழிப்பு
அன்பு மலரட்டும் அரும்புகள் வளரட்டும் இன்பங்கள் பெருகட்டும்
பக்கம்... 38

தொழில் முறை பயிற்சி
உணவகம் நடத்துதல் போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்
பக்கம்... 39

மணிமங்கலம் ஆயத்த ஆடை தயாரிப்பு சங்கம்

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மணிமங்கலம் ஊராட்சியில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் செயல்பட்டு வரும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம், இலக்கு மக்கள் பட்டியலில் உள்ள ஏழை மற்றும் மிகவும் ஏழை குடும்பங்களைச் சேர்ந்த 52 பெண்களுக்கு 3 மாத தையல் பயிற்சி அளிக்கப்பட்டது. வெவ்வேறு சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த இவர்கள் பயிற்சி முடிந்தபின் ஒன்று சேர்ந்து 'மங்கலம் ஆயத்த ஆடை தயாரிப்போர் சங்கம்' என்ற பெயரில் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளனர். தங்கள் அமைப்பை ஒரு சங்கமாகப் பதிவு செய்தனர்.

இக்கூட்டமைப்பு, தொழில் துவங்கும் நோக்கில் ரூபாய். 11,98,905/–க்கான தொழில் திட்ட அறிக்கையை தயார் செய்தது. இதில் உறுப்பினர் பங்களிப்பாக ரூ. 1,19,905/–ம், வங்கிக் கடனாக 5,94,000/– ரூபாயும், கிராம வறுமை ஒழிப்புச் சங்கமானது கடனாக 2,42,500/– ரூபாயும், மானியமாக 2,42,500/– ரூபாயும் வழங்கியுள்ளது.

மேலும் தற்பொழுது உள்ளூர் அளவில் வியாபார ஆணைகளைப் பெற்று நிறுவனத்தை நடத்தி வருகின்றனர். விரைவில் வெளியிடங்களுக்கு ஏற்றுமதி செய்யும் அளவிற்கு தங்கள் நிறுவனத்தை கொண்டு செல்ல திட்டமிட்டுள்ளனர்.

இந்நிறுவனம் வெவ்வேறு தொழில் நுட்பத் திறன்களைக் கொண்ட மகளிரைக் கொண்டு செவ்வனே செயல்பட்டு வருகிறது.

> ஏழை மற்றும் மிகவும் ஏழை குடும்பங்களைச் சேர்ந்த 52 பெண்களுக்கு 3 மாத தையல் பயிற்சி அளிக்கப்பட்டது

'கொன்னை பூ'

வான் கோழி வளர்ப்பில்

இருளர் குடும்பம்

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியத்தில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் செயல்பட்டுக் கொண்டிருக்கும் பழந்தண்டலம் பழங்குடியினர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கமானது தற்பொழுது வான்கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளது. இவ்வறுமை ஒழிப்புச் சங்கம் இத்தொழிலை மேற்கொள்வதற்காக நந்தனம் கால்நடை அறிவியல் ஆராய்ச்சி மற்றும் பல்கலைக் கழக மையத்தில் பயிற்சி எடுத்துக் கொண்டு, அதற்கான சான்றிதழும் பெற்றுள்ளனர்.

> ஒரு மாதமான வான்கோழி குஞ்சு ஒன்றின் விலை ரூ. 100/– வீதம் கொடுத்து வாங்கி வளர்த்து வருகின்றனர். இந்த வான்கோழிகள் நான்கு மாதத்திற்குள் வளர்ந்து, ரூ. 600/– முதல் ரூ. 800/– வரை ஒரு கோழியின் மீது இலாபம் ஈட்டுகின்றனர்.

தற்பொழுது 12 இருளர் குடும்பங்கள் தொழில் குழுவாக தனி நபர் கடன் தலா ரூ. 7000/– பெற்று, வான்கோழி வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். ஒரு மாதமான வான்கோழி குஞ்சு ஒன்றின் விலை ரூ. 100/– வீதம் கொடுத்து வாங்கி வளர்த்து வருகின்றனர். இந்த வான்கோழிகள் நான்கு மாதத்திற்குள் வளர்ந்து, ரூ. 600/– முதல் ரூ. 800/– வரை ஒரு கோழியின் மீது இலாபம் ஈட்டுகின்றனர். இதற்காக ஒரு பொது இடத்தைப் பெற்று, அதில் நவீன தொழில் நுட்பத்தின் உதவியுடன் கட்டமைப்பு உருவாக்கி செயல்படுத்தி வருகின்றனர். மேலும் தினமும் ஒரு குடும்பம் வான்கோழிகளை கண்காணிப்பது என்றும் முடிவெடுத்துள்ளனர்.

இவர்களின் வெற்றியைத் தொடர்ந்து இப்பகுதியில் பல தொழில் கூட்டமைப்புகள் உருவாக உள்ளது. எலி, பாம்பு, பன்றி என வேட்டையாடி பிழைத்த இம்மக்கள் தற்பொழுது வாகனம் ஓட்டுதல், தொழில் கூட்டமைப்புகள் அமைத்தல் என முன்னேறி வருகின்றனர்.

வெள்ளி நகாசு பயிற்சி

(ஊனமுற்றோர், நலிவுற்றோர் வாழ்வில் மறுமலர்ச்சி)

பயிற்சி முடிந்த 5 நாட்களில் இவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு தற்போது, தினமும் 100/– ரூபாய் சம்பளமாகப் பெறுகின்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், படப்பை களப்பகுதியில் படப்பை வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலம் ஊனமுற்றோர் மற்றும் நலிவுற்றோர் 15 நபர்களுக்கு வெள்ளி நகாசு குறித்த 3 மாத பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியை சென்னையை சேர்ந்த 'வெர்டிகல் பிரி சொல்யுஷன்' என்ற நிறுவனத்தினர் அளித்தனர். பயிற்சி முடிந்த 5 நாட்களில் இவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு தற்போது, தினமும் 100/– ரூபாய் சம்பளமாகப் பெறுகின்றனர்.

வாழ்வில் ஒளி தீபம்

என்னுடைய பெயர் சாவித்திரி. எனக்கு 2 பெண் ஒரு ஆண் குழந்தைகள் உள்ளனர். மூவருக்கும் திருமணம் முடிந்து விட்டது. என்னுடைய கணவர் உடல்நிலை சரியில்லாமல் 5 வருடங்களுக்கு முன் இறந்து விட்டார். பிறகு நான் குடும்பம் நடத்த அங்கங்கு வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றி வந்தேன். எங்கள் ஊருக்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டம் வந்தது. அதில் என்னுடைய பெயரை நலிவுற்றோர் பட்டியலில் சேர்த்தனர்.

கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் எனக்குப் பெட்டிக்கடை வைக்க ரூ. 7000/– நிதி உதவி செய்தனர். அந்தப் பணத்தைக் கொண்டு நான் பெட்டிக் கடை வைத்து நடத்தி வருகிறேன். இதில் எனக்கு தினமும் ரூ. 100/– வரை வருமானம் கிடைக்கிறது. நான் யாருடைய உதவியையும் எதிர்பார்க்காமல் எனது சொந்தக் காலில் நிற்கிறேன். என் வாழ்வில் ஒளி தீபம் ஏற்றிய வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு எனது பரிபூரண நன்றியை உரித்தாக்குகிறேன்.

மனமார்ந்த நன்றி

என்னுடைய பெயர் ராஜசேகர். எனக்கு 6 வருடங்களுக்கு முன் உடல்நிலை சரியில்லாமல் படுத்த படுக்கையாக ஆகி விட்டேன். அப்போது என் மனைவி வீட்டில் சிறிய அளவில் வத்தல் வடாவம் போட்டு விற்று குடும்பத்தை காப்பாற்றி வந்தார். அப்போது எங்கள் ஊருக்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதில் எனக்கு ஊனமுற்றோர் அடையாள அட்டை பெற்றுத் தந்தனர். மேலும் தொழில் செய்யக் கடன் கொடுத்தனர். தற்போது சுழல் நிதியாக ரூ. 10,000/– கொடுத்தனர். அதை வைத்து எங்களது தொழிலை விரிவுபடுத்தி உள்ளோம். இதில் எங்களுக்கு தினமும் ரூ. 150/– வரை வருவாய் கிடைக்கிறது. இதன் மூலம் நானும் எனது குடும்பமும் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளோம். எனக்கு உதவி செய்த வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறப்பு நிதி

புக்கத்துரை கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் நலிவுற்றோருக்கான சிறப்பு நிதி பெற்று கன்னியப்பன் பயனடைந்துள்ளார்.

“ எங்களுக்கு தினமும் ரூ. 150/– வரை வருவாய் கிடைக்கிறது. இதன் மூலம் நானும் எனது குடும்பமும் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளோம். எனக்கு உதவி செய்த வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ”

வறுமை ஒழிப்பு

என் உயிரினும் மேலான தமிழுக்கு வணக்கம்
என் உணர்வில் கலந்த தமிழ் நெஞ்சங்களுக்கும் வணக்கம்
புதியவை புகுதலும் பழையவை கழிதலும் இன்னலே
புதியவை புகுந்தது வறுமை ஒழிப்புச் சங்கம்
பழையது கழிந்தது இதுவே பேரானந்தம்
தட்டுங்கள் திறக்கப்படும் என்றார்கள்
தட்டாமல் திறந்தது நம் வறுமை ஒழிப்புச் சங்கம்
கேளுங்கள் கொடுப்போம் என்றார்கள்
கேட்டவுடன் கொடுப்பது நம் வறுமை ஒழிப்புச் சங்கம்
உள்ளங்களை சுத்தப்படுத்துங்கள்
உணர்வுகளைப் பரிமாற்றிக் கொள்ளுங்கள்
வாழ்வை வளப்படுத்துங்கள்
வளமையை அதிகப்படுத்துங்கள்
துன்பங்களைத் துரத்தி அடியுங்கள்
இன்பங்களை இணைத்துக் கொள்ளுங்கள்
அன்பு மலரட்டும்
அரும்புகள் வளரட்டும்
இன்பங்கள் பெருகட்டும்
ஈகை வளரட்டும்
உண்மை நிலைக்கட்டும்
ஊனம் சரியாகட்டும்
எண்ணங்கள் நிறைவேறட்டும்
ஏற்றங்கள் இனிதாகட்டும்
ஐயம் தெளிவுறட்டும்
ஆண்டவனை வேண்டுவோம்
என

என்றும் அன்புடன்
சரஸ்வதி (செயலாளர்)
சி. வெங்கடேசன் (பிரம்மா)
அருங்குணம்

“ நான் தேர்வு செய்யப்பட்டு, எனக்கு இண்டிமேட் பேஷன்ஸ் நிறுவனத்தில் பணி வழங்கப்பட்டது. தற்போது மாத வருமானமாக எனக்கு ரூ. 2500/– கிடைக்கிறது. இதன் மூலம் எனது வயதான தாய் தந்தையரின் வருமான பற்றாக்குறையை போக்க முடிந்தது. ”

வெற்றி கதை

மகத்தான திட்டம்

பெயர்: சவிதா
கல்வி: 10ம் வகுப்பு (தேர்ச்சி பெறவில்லை)
தந்தை: திருவேங்கடம் (வயது 50)
தாயார்: மனோன்மணி (வயது 45)
உடன் பிறந்தவர்கள் ஜீவா(இளைய சகோதரன்) சங்கீதா (மூத்த சகோதரி)

என்னுடைய பெயர் சவிதா, எனது தந்தை மற்றும் தாயார் கூலி வேலை செய்து எங்களுடைய ஜீவனத்தை செய்து வந்தோம். மேலும் எங்களுடைய அன்றாட தேவைகளையே எங்களால் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் இருந்தோம். எங்கள் தாய் தந்தைக்கு மாதத்தில் 10 நாட்கள் மட்டுமே வேலை கிடைக்கின்றது. அதன் மூலம் மாதம் ரூபாய் 1200/– மட்டுமே கிடைக்கும்.

இந்த சூழ்நிலையில் எங்கள் ஊரில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது. காஞ்சிபுரம் மாவட்ட திட்ட அலுவலகமும், கூடுவாஞ்சேரி இண்டிமேட் பேஷன்ஸ் நிறுவனமும் இணைந்து தையல் பயிற்சி மற்றும் பணிக்கு ஆட்களை தேர்ந்தெடுக்க முகாம் நடத்தினார்கள். அம்முகாமில் நான் தேர்வு செய்யப்பட்டு, எனக்கு இண்டிமேட் பேஷன்ஸ் நிறுவனத்தில் பணி வழங்கப்பட்டது. தற்போது மாத வருமானமாக எனக்கு ரூ. 2500/– கிடைக்கிறது. இதன் மூலம் எனது வயதான தாய் தந்தையரின் வருமான பற்றாக்குறையை போக்க முடிந்தது. வாழ்ந்த காட்டுவோம் திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்னர் என்னைப் போன்று ஏராளமானோர் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர். வாழ்ந்து காட்டுவோம் திட்டம் எங்கள் ஊருக்கு மட்டுமல்லாது இந்தப் பகுதியில் படித்த வேலையில்லாத ஏராளமான இளம் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு வேலை வாய்ப்பினையும், நிரந்தர வருமானத்தையும் பெற்றுத் தந்து, பொருளாதார அளவில் எங்கள் வாழ்வில் ஒரு மாற்றத்தை உருவாக்க வந்த மகத்தான திட்டம் என்று நினைக்கிறேன்.

வெற்றி கதை

முழு முதற்காரணம்

பெயர்: பாஸ்கர்
கிராமத்தின் பெயர்: எல். என். புரம்
தன்மை: கால் ஊனம்

என்னுடைய பெயர் பாஸ்கர். நான் காஞ்சிபுரம் மாவட்டம் மதுராந்தகம் ஒன்றியம் ஓனம்பாக்கம் ஊராட்சியில் உள்ள எல். என். புரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கால் ஊனமுற்றவன்.

எனது தந்தையார் 20 வருடங்களுக்கு முன்னர் இறந்து விட்டார். எனது தாயார் கூலி வேலை செய்து என்னை 12ஆம் வகுப்பு வரை படிக்க வைத்தார்கள். மேற்கொண்டு படிக்க வசதியில்லை என்பதால் நான் ஒரு எலக்ட்ரிகல் ரிப்பேர் கடையில் வேலைக்கு சென்று கொண்டிருந்தேன். அங்கு வேலை செய்ய பிடிக்காமல் வீட்டிலேயே இருந்து வந்தேன்.

எங்களது கிராமத்திற்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டம் வந்தது. அதில் எனக்கு முதலில் ஊனமுற்றோர் அடையாள அட்டை வாங்கித் தந்தார்கள். பிறகு எனக்கு தெரிந்த தொழிலை செய்ய கடன் தருவதாகக் கூறி ரூ. 7,000/– கடன் கொடுத்தார்கள்.

நான் அந்தப் பணத்தை வைத்து எனக்கு முன்பே தெரிந்த மிக்சி, அயர்ன் பாக்ஸ் சர்வீஸ் கடை வைத்தேன். நல்லமுறையில் தொழில் நடைபெற்றது. அதில் கிடைத்த வருமானத்தைக் வைத்து மேற்கொண்டு கடையை விரிவுபடுத்தி தற்போது நல்ல நிலைமைக்கு வந்துள்ளேன்.

நான் தினமும் ரூ. 150/– சம்பாதிக்கிறேன். என் தாயை வேலைக்கு அனுப்பாமல் வீட்டிலேயே வைத்து நன்றாக கவனித்து வருகிறேன். எனது முழுமையான வளர்ச்சிக்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டம்தான் முழு முதற்காரணமாகும் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

“நான் தினமும் ரூ. 150/– சம்பாதிக்கிறேன். என் தாயை வேலைக்கு அனுப்பாமல் வீட்டிலேயே வைத்து நன்றாக கவனித்து வருகிறேன். எனது முழுமையான வளர்ச்சிக்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டம்தான் முழு முதற்காரணமாகும் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.”

தொழில் முறை பயிற்சி

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் காஞ்சிபுரம் மாவட்டத்தில், இளைஞர் மற்றும் இளம் பெண்கள் 4092 நபர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. சுய தொழில் செய்யும் வாய்ப்பாக வான்கோழி வளர்ப்பு, பால் பண்ணை அமைத்தல் போன்ற பலதரப்பட்ட பயிற்சிகள் சுமார் 452 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சிகளைப் பெற்றவர்கள் மங்கலம் கார்மெண்ட்ஸ் மற்றும் வான்கோழி வளர்ப்பு, ஜப்பானிய காடை வளர்ப்பு மற்றும் உணவகம் நடத்துதல் போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

இளைஞர் மற்றும் இளம் பெண்கள் **4092** நபர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

"நான் தேர்வு செய்யப்பட்டு, எனக்கு இண்டிமேட் பேஷன்ஸ் நிறுவனத்தில் பணி வழங்கப்பட்டது. தற்போது மாத வருமானமாக எனக்கு ரூ. 2500/– கிடைக்கிறது. இதன் மூலம் எனது வயதான தாய் தந்தையரின் வருமான பற்றாக்குறையை போக்க முடிந்தது."

வெற்றி கதை

மனமார்ந்த நன்றி

என் பெயர் தியாகு, த/பெ. தாமோதரன். நான் மிகவும் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன். என் பெற்றோர்கள் கூலி வேலைக்குச் சென்றுதான் என்னை 10ஆம் வகுப்பு வரை படிக்க வைத்தார்கள். எங்கள் வீட்டில் 6 நபர்கள் உள்ளனர். பத்தாம் வகுப்பு வரை படித்து விட்டு மேற்கொண்டு படிக்காமல் ஊரைச் சுற்றி வந்த என்னை, வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் ஓட்டுனர் பயிற்சிக்கு அனுப்ப முடிவு செய்து, அருகாமையில் உள்ள டி.எம்.எஸ். ஓட்டுநர் பயிற்சி பள்ளியில் சேர்த்து, ஒரு மாத காலம் பயிற்சியும் அளித்து, ஓட்டுநர் உரிமமும் பெற்றுத் தந்தனர். தற்போது ஜே. எஸ். டிரான்ஸ்போர்ட் என்ற கம்பெனியில் ஓட்டுநராக பணியாற்றி வருகின்றேன். மாத வருமானமாக ரூ. 4,000/– கிடைக்கிறது. வேலையில்லாமல் இருந்த நான், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் மூலம் பயிற்சி பெற்று, தற்போது ஓட்டுநராக பணிபுரிவதால், எங்களது குடும்பம் வறுமை நீங்கி நல்ல நிலையில் உள்ளது. வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு எனது மனமார்ந்த நன்றி.

Published by S. CHINNAPPAN, on behalf of Mutram Society from Tamilnadu Corporation for Development of Women Ltd., 100, Anna Salai, Guindy, Chennai - 600 032. (79,250 copies circulated) an printed by C. JABAMANI. CANAAN PRESS PRIVATE LTD., 62/1, Peter's Road, Royapettah, Chennai - 600 014. Editor : S. CHINNAPPAN.

எச்.ஐ.வி. உள்ளவரும்
என்னைப் போன்ற மனிதர்களே
அவர்களுக்கும்
வளர, வாழ, படிக்க, பழக
உரிமை உண்டு
உரிமை காக்க
உடன் நிற்போம்
தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்
தொலைபேசி : 044-2819 0891, 2819 0467

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 2282/2004
Reg. No. TN/CC(S)Dn./64/09-11 & Licensed to Post Order without Prepayment No. 564 / 09 - 11

- சுற்றுலா நட்பு வாகனப் பயணம் சுகமான அனுபவம்
- சுற்றுலா இடங்களுக்கு மட்டுமல்ல எப்பொழுதும் எங்கேயும் செல்லலாம்
- சரியான கட்டணம் (மீட்டர் முறைப்படி)
- கனிவான சேவை
- சுற்றுலா நட்பு வாகனங்களை ஊக்குவிப்போம்

DIPR/DIS/926/09

சுற்றுலா மைய தொலைபேசி எண்கள்: சென்ட்ரல் இரயில் நிலையம் 25353351, எழும்பூர் 28192165, விமான நிலையம் 22560437/0569, கோயம்பேடு மத்திய பேருந்து நிலையம் 24791888, சுற்றுலா அலுவலகம் 25368358.

தமிழ்நாடு சுற்றுலா

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சிறப்பு சுற்றுலா பயணத்திட்டங்கள், தங்கும் வசதி மற்றும் போக்குவரத்து வசதிகளைப் பற்றி தெரிந்து கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்: தமிழ்நாடு சுற்றுலா வளாகம், வாலாஜா சாலை, சென்னை - 600 002. தொலைபேசி: 91-44-25383333, 25388785, 25361640. நிகரி: 91-44-25361385, 25382772. மின்னஞ்சல்: ttdc@vsnl.com இணையதளம்: tamilnadutourism.org முன்பதிவிற்கான இணையதளம்: ttdconline.com